பிப்ரவரி 2003

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்






www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## "கஜானா" கொள்ளை

"செல்லுலர்" தொலைபேசி சேவை புற்றீசல் போல் பரவி வருவதால், "பேஜர்" சேவைத் தொழில் சரிந்து வீழ்கிறது. "பேஜர்" தொழில் நசிவடையலாம்; ஆனால், அத்தொழிலில் மூலதனமிட்ட முதலாளிகள் நட்டமடையலாமா? அதனால், பா.ஜ.க. கூட்டணி அரசு "பேஜர்" சேவையைத் தூக்கி நிறுத்த பல சலுகைகளை வாரி இறைத்துள்ளது. இதன்படி, "பேஜர்" நிறுவனங்கள் மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய 450 கோடி ரூபாய் உரிமத் தொகை நிலுவையைச் செலுத்த வேண்டியதில்லை என மைய அரசு அறிவித்துவிட்டது. இதற்குப் பெயர் சலுகையா? பகற்கொள்ளையா?

## வாராக் கடனை வசூலிக்க இதுவும் ஒரு வழி

அரசு வங்கியான விஜயா வங்கிக்கு முதலாளிகள் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் பாக்கி 806 கோடி ரூபாய். இத்தொகையைத் திருப்பிச் செலுத்தாமல், கடுக்காய் கொடுத்துக் கொண்டிருக்கும் 134 முதலாளிகளிடமிருந்து கடன் பாக்கியை வட்டியோடு வசூலிக்க, அவ்வங்கி ஊழியர்கள் அதிரடிப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். இதன்படி அவ்வங்கி ஊழியர்கள், கடனைத் திருப்பிச் செலுத்தாத முதலாளிகளின் வீடு, தொழிற்சாலை இருக்கும் பகுதிகளில், அம்முதலாளிகளின் புகைப்படத்தோடு, அவன் ஏப்பம் விட்ட கடன் பாக்கியையும் எழுதி வைத்து, அவர்களின் கௌரவத்தைச் சந்தி சிரிக்க வைக்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள். தங்கள் மானம் கப்பலேறுவதைச் சகிக்காத முதலாளிகள், தற்பொழுது வாங்கிய கடனைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிச் செலுத்தி வருகிறார்களாம்!

## மாணவர்களின் போராட்டத்தால் மிரளும் அரசு

இந்தோனேஷியா அரசு பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு, மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்களைப் புத்தாண்டு முதல் அதிரடியாக உயர்த்தியது. இந்தக் கட்டண உயர்வுக் கொள்ளைக்கு எதிராகப் போராட்டத்தில் குதித்த மாணவர்கள், பல நகரங்களில் போலீசாருடன் நேரடியாக மோதியும் வருகின்றனர். மூன்று வாரங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து நடந்து வரும் மாணவர்களின் போராட்டம் காரணமாக, அந்நாட்டின் அதிபர் மேகவதி சுகர்னோபுத்ரி தலைநகரை விட்டு வெளியே வரமுடியாதபடி தத்தளிக்கிறார். தலைநகரில் இருந்து அறுபதே கிலோ மீட்டர் தொலைவில் உள்ள போகோர் விவசாயக் கல்லூரியில் நடைபெறவிருந்த விழாவில் கலந்து கொள்வதைக்கூட ரத்து செய்ய வேண்டிய நிலைக்கு, மாணவர்களின் போராட்டம் அதிபரை நெருக்கடிக்கு உள்ளாக்கி விட்டது. அந்த விழாவில் அதிபருக்குப் பதிலாக அவரின் அமைச்சர்கள் கலந்து கொள்ள முயன்ற பொழுது அமைச்சர்கள் கல்லூரிக்குள் நுழைய முடியாதபடி மாணவர்கள் கல்லூரியை முற்றுகை இட்டுக் கொண்டதோடு, அமைச்சர்களின் கார்கள் மீது சாணியை வீசியெறிந்துத் துரத்தியடித்தனர்.

அத்தியாவசியப் பொருட்கள் - சேவைகளின் விலை உயர்வை எதிர்த்து இந்தோனேஷிய மாணவர்கள் அதிபர் மாளிகையின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.



## கோகோ கோலாவின் சதி

வெனிசுலாவில் இயங்கி வரும் அமெரிக்க நிறுவனமான கோகோ கோலாவும், போலார் என்ற மற்றோரு தனியார் நிறுவனமும் கடந்த இரண்டு மாதங்களாக, தாங்கள் தயாரிக்கும் குளிர்பானங்களையும், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களையும் முழுமையாக விற்பனைக்கு அனுப்பாமல், பெரும் பகுதியைப் பதுக்கி வைத்து, செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளன. அந்நாட்டில் நடந்து வரும் அதிபர் சாவேஸின் ஆட்சியைச் சட்ட விரோதமான முறையில் கவிழ்த்துவிடுவதற்காக, அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்தி வரும் சதியின் ஒரு பகுதிதான் இந்தப் பதுக்கல். தற்பொழுது பதுக்கி வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களைக் கைப்பற்றிவிட்ட சாவேஸ் அரசு, அவற்றை அரசின் மேற்பார்வையில் விற்பனைக்கு அனுப்பி வருகிறது. ஏழை நாடுகளில் நுழையும் பன்னாட்டு நிறுவனங்கள், வர்த்தகச் சதிகளில் மட்டுமல்ல, அரசியல் சதி வேலைகளையும் செய்யும் என்பதற்கு இது இன்னுமொரு எடுத்துக்காட்டு!

## ரசிய முதலாளிகளின் வக்கிர விளையாட்டுகள்

சூதாடுவது, உல்லாச விடுதிகளில் குடித்துவிட்டு ஆட்டம் போடுவது, பல்வேறு நாடுகளில் உள்ள கடற்கரையோர விடுதிகளுக்குப் போய் படுத்துக்கிடப்பது போன்ற பழைய பாணியிலான முதலாளித்துவ பொழுதுபோக்குகள், ரசியாவின் புதுப் பணக்காரக் கும்பலுக்குச் சலிப்பூட்டுவதாகப் போய்விட்டதாம். இதனால் அந்தக் கும்பல் இப்பொழுது பிச்சைக்காரர்களைப் போல வேடம் போட்டுக் கொண்டு ரசிய ரயில் நிலையங்களில் பிச்சையெடுப்பது; விபச்சாரிகளைப் போலவும், விபச்சாரத் தரகர்களைப் போலவும் வேடம் போட்டுக் கொண்டு வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுப்பது போன்ற 'விளையாட்டு'க்களை ஏற்பாடு செய்து பொழுதைக் கழிக்கத் தொடங்கியிருக்கிறது. போலீசின் தொந்தரவு இன்றி இந்த விளையாட்டுக்களில் ஈடுபட, அவர்கள் பல இலட்ச ரூபாய்களை வாரி இறைத்து வருகிறார்கள். சமூக அவலங்களைப் பொழுதைக் கழிக்கும் விளையாட்டாகப் பார்க்கும் இந்த வக்கிர மனோபாவம், ரசியப் புதுப் பணக்காரக் கும்பலுக்கு, சலித்துப் போன அவர்களின் வாழ்வில் கிளர்ச்சியூட்டக் கூடியதாக இருக்கிறதாம்!

●○●



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

**இதழ் 4**

பிப்ரவரி 2003

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

அட்டை ஓவியம்
முகிலன்



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண். 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


# பா.ஜ.க. அரசின் அப்பட்டமான துரோகம்!

தரகு அதிகார ஏகபோக முதலாளிகளுக்கும், அந்நிய மேல்நிலை வல்லரசுகளுக்கும் சேவை செய்யும் வகையில் நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராகத் துரோகமிழைக்கும் நாசகர வேலைகளில் ஆளும் பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான மத்திய அரசு அப்பட்டமாக அதீத வேகம் காட்டுகிறது. ''பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்,'' ''இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்'' ஆகிய இரண்டு அரசு நிறுவனங்களைத் தனியாருக்கு தாரை வார்ப்பது என்றும், அரசு தொலைபேசித்துறை நகர்ப்புறக் கட்டணங்களைப் பல முனைகளிலும் உயர்த்துவது என்றும் அரசு முடிவு செய்துள்ளது. முழுக்க முழுக்க அரசுக்குச் சொந்தமாக இருந்த தொலைத் தொடர்புத் துறையை தரகு அதிகார முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு மாற்றும் துரோகச் செயலைத் திட்டமிட்டுச் செய்து வருகிறது, அரசு. இதற்காகவே அரசுத் தொலைத் தொடர்பு அமைப்பு தனிக் ''கார்ப்பரேஷன்'' ஆக்கப்பட்டது. ஏற்கெனவே வெளிநாடு மற்றும் மாநகரத் தொலைத் தொடர்புக்கானவை தனித்தனி ''கார்ப்பரேஷன்''களாக்கப்பட்டிருந்தன. விரைவில் அவையும் தனியாருக்கு தாரை வார்க்கப்படும்; இது ஒரு புறம் இருக்க, ''செல்போன்'' சேவைகளை நடத்துவதற்கு தனியார் – தரகு அதிகார முதலாளிகளையும், ஏகாதிபத்திய நிறுவனங்களையும் அரசு அனுமதித்தது. அவை அரசுக்குரிய பல ஆயிரம் கோடி உரிமத் தொகையைச் செலுத்தாமலேயே ஒரு சுற்றுக் கொள்ளை இலாபம் ஈட்டிவிட்டன.

அதன் பிறகு அம்பானியின் ரிலையன்ஸ், டாடாவின் இண்டிகாம் மற்றும் அரசின் பொறுப்பிலுள்ள ''கார்ப்பரேஷன்'' ஆகியவை புதிய தொழில் நுட்பத்தோடு (டபிள்யூ எல்.எல்.-''வில்'') ''செல்போன்'' துறையில் நுழைந்தன. இந்த ''வில்'' தொழில்நுட்பம் காரணமாக இவர்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் உள்ளூர் மற்றும் உள்நாட்டு ''சேவைகள்'' நடத்த முடியும். அதோடு, அரசு தொலைபேசித் துறை ஊழியர்கள் கடுமையாக உழைத்து உருவாக்கியிருக்கும் கம்பிவழி வலைப் பின்னலை இவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

''வில்'' தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுடன் பழைய தொழில்நுட்ப அடிப்படையில் இயங்கும் ''செல்போன்'' நிறுவனங்கள் போட்டியிட முடியவில்லை. புதிய நிறுவன ''செல்போன்''களுக்குத் தொடர்பு கொடுக்க மறுத்தனர். இந்த முரண்பாடு – மோதலுக்கு சமரசத் தீர்வு காணவும், மேற்கண்ட இருதரப்பாரின் சந்தையை விரிவுபடுத்தவும்தான் அரசு நிறுவனத் தொலைபேசிக் கட்டணம் கிடுகிடுவென உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கையைப் புகுத்தியபோது, நட்டமேற்படும் அரசுத் தொழில்கள் மட்டும்தான் தனியாருக்கு விற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, உண்மையில் பெரும் இலாபமீட்டும் நிறுவனப் பங்குகளே தாரை வார்க்கப்பட்டன. முன்பு பெட்ரோலியப் பொருட்களின் விலையேறுவதற்கே, கடும் எதிர்ப்பும் தயக்கமும் இருந்த நிலை மாறி பெட்ரோலிய நிறுவனங்கள் விற்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆளும் கூட்டணிக் கட்சிகளும், பெட்ரோலியத் துறை அமைச்சகமுமே எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. முன்பு 51 சதவீதப்பங்கு அரசிடம் இருப்பதால் நாட்டு நலனுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று கூறியது போய், இப்போது ஒன்றில் 12, மற்றதில் 26 என்ற அளவே பங்கு அரசிடம் இருக்கப் போகிறது. விற்கப்படும் ''பெட்ரோலிய'' நிறுவனங்களின் பங்குகளை வேறு அரசுசார் நிறுவனங்கள் வாங்கக் கூடாது என்றும் அரசு உத்திரவு போட்டுள்ளது.

இனி, மற்ற பிற துறைகளோடு தொலைத் தொடர்புத் துறை மற்றும் எண்ணெய் எரிவாயுத்துறை ஆகியவற்றிலும் தரகு அதிகார முதலாளிகளும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் வைத்ததுதான் சட்டம்; அவர்கள் தம் முடிவுப்படி நாட்டின் தலைமீது ஏறி மிதிக்கலாம். ஏகபோக ஆதிக்கம் செலுத்தலாம். இந்த இரு முடிவுகளையும் எடுத்துவிட்டு அடுத்த நாளே ஆர்.எஸ்.எஸ்.–சின் சுதேசி ஜாக்ரான் மஞ்ச் என்ற அமைப்பு மும்பையில் நடத்திய ''சுதேசி விழா''வைத் தொடங்கி வைத்திருக்கிறார், வாஜ்பாயி. இதைத்தான் ''சாத்தான் வேதம் ஓதுகிறது'' என்கிறார்கள். இரட்டை வேடம் என்பது உண்மை வெளியே தெரியக்கூடாது என்பதற்காகப் போடப்படும் நாடகம். ஆனால், இங்கே பகிரங்கமாகவே இரட்டை நிலை எடுக்கிறது ஆளுங்கட்சி. இதற்குக் காரணம் பெயரளவுக்கு எதிர்ப்புக் காட்டும் காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகள் உட்பட ஓட்டுக் கட்சிகள் எல்லாமே தனியார்மயம் - தாராளமயம் – உலகமயமாக்கத்தையும் அதன் மூலம் மறுகாலனியாதிக்கத்தையும் ஆதரிப்பதுதான். நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே திரளும் புரட்சிகர, ஜனநாயக சக்திகள் மட்டும்தான் உண்மையில் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான துரோக – மறுகாலனிய ஆதிக்கத்தை எதிர்க்கும் சக்தியாக உள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

# நெற்களஞ்சியம் பிணக்காடாகிறது

காவிரிப் பாசனப் பகுதியில் குறுவை சாகுபடி வழமையாக நான்கு இலட்சம் ஏக்கர் பரப்பில் நடக்கும். ஆனால், காவிரிப் பிரச்சினை காரணமாக கடந்த ஆண்டு அப்பரப்பில் நான்கில் ஒரு பகுதியில்தான் குறுவை நடப்பட்டது. இந்தப் பயிருக்கும் காவிரியில் தண்ணீர் திறந்துவிட கருநாடகம் கடைசிவரை மறுத்துவிட்டதால், காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகள் குறுவையால் அடைந்த நட்டம், இழப்பு 1,080 கோடி ரூபாய். இந்த நட்டக் கணக்கை தமிழக அரசே புள்ளிவிபரமாக வெளியிட்டுள்ளது.

இந்த நட்டத்தையும் தாங்கிக் கொண்டுதான் காவிரிப் பாசன விவசாயிகள் ஏழு இலட்சம் ஏக்கரில் சம்பா நடவைத் தொடங்கினர். வழமையாக சம்பா நடவு 14 இலட்சம் ஏக்கரில் நடைபெறும். காவிரியில் வர வேண்டிய தண்ணீர், பருவமழை இரண்டையும் வைத்து சம்பா பயிரைக் காப்பாற்றி விடலாம் என விவசாயிகள் நம்பியிருந்தனர். அதே சமயம், ஜெயாவோ சம்பா பயிருக்கு காவிரியில் தண்ணீரைப் பெற உச்சநீதி மன்றத்தில் கருநாடகத்தின் மீது தொடுத்திருந்த இரண்டு அவதூறு வழக்குகளை நம்பியிருந்தார்.

காவிரியில் தினந்தோறும் 1.25 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என உச்சநீதி மன்றம் 03.09.2002 அன்று அளித்த தீர்ப்பையும்; 1.25 டி.எம்.சி.க்குப் பதிலாக, காவிரியில் நாள்தோறும் 0.8 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட்டால் போதும் என 08.09.2002 அன்று காவிரி ஆணையம் அறிவித்த முடிவையும் கருநாடக அரசு நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டதற்கு எதிராகத் தமிழக அரசால் இந்த அவதூறு வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

இந்த வழக்கு கடந்த ஆண்டு அக்டோபர் 26-ஆம் தேதி விசாரணைக்கு வந்தபொழுது, காவிரி ஆணையத்தின் முடிவை கருநாடகம் அமல்படுத்த வேண்டும் என உத்தரவிட்ட உச்சநீதி மன்றம், தீர்ப்பை அக். 29–க்குத் தள்ளி வைத்தது. அக்–29 அன்று தீர்ப்பை நவம்பர் 1–க்கும், நவம்பர் 1 அன்று தீர்ப்பை நவம்பர் 15–க்கும் மீண்டும் மீண்டும் தள்ளி வைத்தது. நவம்பர் 15 அன்று, காவிரி ஆணையம் நவம்பர் 29 அன்று கூடுவதைக் காட்டி, தீர்ப்புக் கூறுவதை டிசம்பர் 5–க்குத் தள்ளி வைத்தது.

காவிரி ஆணையம் கூடவிருந்த நவம்பர் 29 காலையில், ''உடல்நலக் குறைவால் கூட்டத்தில் தான் கலந்து கொள்ள முடியாது; தனக்குப் பதிலாக பொன்னையன் கலந்து கொள்வார்'' எனத் திடீரென அறிவித்தார், ஜெயா. அதேசமயம், கேரள முதல்வர் அந்தோணியும் உடல் நலக் குறைவு காரணமாக ஆணையக் கூட்டத்தில் பங்கேற்காததால், ஆணையக் கூட்டம் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

உச்சநீதி மன்றமோ, டிசம்பர் 5 அன்று தமிழக அரசின் அவதூறு வழக்கை விசாரணைக்கே எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கான காரணத்தையும் கூறவில்லை. காவிரி ஆணையம் கூடி முடிவெடுத்த பிறகே வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற அதிகாரபூர்வமற்ற 'செய்தி' கசிந்து வெளியே வந்தது. இப்படியாக, காவிரி நீரைப் பெறத் தமிழக அரசு நம்பியிருந்த வழக்கு காற்றுப் போன பலூன் ஆனது.

உச்சநீதி மன்றத்தின் நரித்தனம், மைய அரசின் கூட்டுக் களவாணித்தனம், கருநாடகாவின் அடாவடித்தனம் காரணமாக, சம்பா பயிரை நட்டிருந்த விவசாயிகள், தங்கள் பயிரைக் காப்பாற்ற பருவ மழையை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். கடந்த ஆண்டு அக்டோபர் இறுதியிலேயே பருவமழை தொடங்கிவிட்டாலும், நவம்பர் இரண்டாவது வாரத்திற்குப் பின் பருவமழை போக்குக் காட்டிப் போய்விட்டது. இதனால் சம்பா பயிரும் கருகத் தொடங்கி, 1,280 கோடி ரூபாய் நட்டம் விவசாயிகளின் தலையில் விழுந்தது.

### விவசாயிகளின் வேதனை – ஆளுங்கும்பலுக்கு வேடிக்கை

டிசம்பர் இரண்டாவது வாரத்திலேயே, தஞ்சைப் பகுதியில் நிலங்கள் தண்ணீர் இன்றிப் பாளம்பாளமாக வெடிக்கத் தொடங்கின. விவசாயிகள் வேதனையோடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது, ஜெயாவோ, ஹைதராபாத்தில் உள்ள தனது திராட்சை தோட்ட பங்களாவில் உல்லாசமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். காயத் தொடங்கிய பயிர்களை விவசாயிகள் மாடு மேய விட்ட பொழுது, ஜெயாவோ

பயிர் கருகிப் போனதால் தற்கொலை செய்து கொண்ட வீரையன், சண்முகம், அதிர்ச்சியால் இறந்து போன பத்மாவதி.









படிப்பகம்

www.padippakam.com

சந்திரபாபு நாயுடு அளித்த விருந்தில் வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தார். ரோம் நகரம் பற்றி யெரிந்த பொழுது பிடில் வாசித்த நீரோ மன்னனுக் கும், பாசிச ஜெயா வுக்கும்தான் எப்பேர்பட்ட பொருத்தம்!



வாய்க்காலில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரைக் குடத்தில் எடுத்து வந்து பயிரைக் காப்பாற்றப் பாடுபடும் விவசாயி.

சென்னை நகர மக்களின் குடிநீர்த் தேவைக்காகவே, ஜெயா சந்திர பாபுவைச் சந்தித்த தாக தமிழக அரசு விளக்கமளித்தது. இப்படிபட்ட 'கடமை'யுணர்ச்சி யையும், நெகிழ்வுத் தன்மையையும் ஜெயா காவிரிப் பிரச்சினையில் காட்ட வில்லை.

''சம்பா பயிரைக் காப்பாற்ற 43 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட உச்ச நீதி மன்றம் உத்திரவிட வேண்டும்'' என தமிழக அரசு நவம்பர் 15 அன்று உச்சநீதி மன்றத்தில் மனு செய்தது. நவம்பர் 29 அன்று கூடவிருந்த காவிரி ஆணையம் கூடாமல் ஒத்தி வைக்கப்பட்ட பின்னும்; டிசம்பர் 5 அன்று உச்சநீதி மன்றம் தமி ழக அரசின் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் நழுவிக் கொண்ட பின்னும் தமிழக அரசு கருநா டகத்தில் இருந்து தண்ணீரைப் பெற வேறு விதமான முயற்சி எதையும் செய்யவில்லை. ''பொதுப்பணித்துறை அமைச்சர், அதிகாரிகள் மட்டத்தில் பேசியாவது தண்ணீரைப் பெற்றிருக்க வேண்டும்'' என்கிறார் காவிரிப் பாசன விவசாயிகள் சங்கப் பொதுச் செயலர் ரெங்கநாதன்.

ஆனால் ஜெயாவோ, தமிழகத்தின் உயிராதாரமான காவிரிப் பிரச்சி னையைத் தன்னகங்காரத்தோடே அணு கினார். காவிரிப் பிரச்சினையைத் தனது சொந்த பலத்தைக் காட்டுவதற்கான வாய்ப்பாகவே பார்த்தார். காவிரிப் பிரச் சினைக்காக காவிரிப் பாசன விவசா யிகள் போராடுவதைக் கூட அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. சனவரி 9-ஆம் தேதி காவிரிப் பாசனப் பகுதியில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் தோல்வியடைந்து விட்டதாகக் காட்ட உள்ளூர் அ.தி.மு.க. குண்டர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர். தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக் கான விவசாயிகள் அ.தி.மு.க. அரசால் சிறையில் தள்ளப்பட்டனர்.

காவிரிப் பாசனப் பகுதியைச் சேர்ந்த பத்து இலட்சத்துக்கும் அதிகமான விவ சாயத் தொழிலாளர்கள், சம்பா சாகு படியில் கிடைக்கும் 15% கூலி நெல்லைக் கொண்டுதான், ஆண்டு முழு வதும் சாப்பிடுகிறார்கள். சம்பா சாகுபடி யிலும் கருநாடகம் மண்ணை அள்ளிப் போட்டதால், இந்தக் கூலி விவசாயத் தொழிலாளர்கள் பட்டினிச் சாவை நோக்கித் தள்ளப்பட்டுவிட்டனர். சிறு, நடுத்தர விவசாயிகளும் விளைச்சல் இன்றி, கடனை அடைக்க வழியின்றி, வாழ்வா, சாவா போராட்டத்தில் சிக்கிக் கொண்டு விட்டனர்.

சம்பா சாகுபடியைச் சூழ்ந்துள்ள இந்த அபாயம் பற்றி நவம்பர் மாத இறு தியிலேயே தமிழக அரசுக்குத் தெரியும். அப்படியிருந்தும் கூட, காவிரிப் பாசன விவசாயிகளுக்கு நிவாரணமோ வேறு உதவிகளோ செய்வதற்குத் தமிழக அரசு முன்வரவில்லை. விவசாயிகள் எதிர் நோக்கியிருந்த அபாயத்தை ஓரந்தள்ளி விட்டு, இந்து மதத்திற்கு அபாயம் எனக் கூப்பாடு போடத் தொடங்கினார், பார்ப்பன ஜெயா.

காவிரிப் பாசன விவசாயிகள் காவி ரியில் தண்ணீர் வருமா, பருவமழை ஏமாற்றாமல் பெய்யுமா, சம்பா பயிரைக் காப்பாற்ற முடியுமா என மருகிக்கொண் டிருந்த பொழுதுதான், தமிழக விவசாயி களுக்கு வழங்கப்பட்டு வந்த 'இலவச' மின்சாரத்தை ரத்து செய்யப் போவதாக அறிவித்தார், ஜெயா.

''இலவச மின்சா ரமும் கிடைக்காத தால், சொந்த கரண் டுனால மணிக்கு 40 ரூபா கேக்குறாங்க; 100 குழி நெலமும் நனையனும்னா 20 மணி நேரம் தண்ணி பாயணும்; செலவு பண்ணி பாத்தா 800 ரூபா ஆவுது. இனி விவசாயமெல்லாம் பண்ண முடியாது'' என்கிறார், திரு வாரூர் மாவட்டம் - குளிக்கரையைச் சேர்ந்த விவசாயி.

பருவமழை பெய்யத் தொடங்கி யதையடுத்து ஓட்டுக்கட்சிகளால் ஓரங்கட்டி வைக்கப்பட்டிருந்த காவிரிப் பிரச்சனை, விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள், அகால மரணங்க ளையடுத்து மீண்டும் முன்னுக்கு வந்து விட்டது. பாதியளவு சம்பா, தாளடிப் பயிர்களைக் காப்பாற்ற வேண்டு மென்றால் கூட, அதற்கு 30 முதல் 40 டி.எம்.சி. வரை தண்ணீர் தேவைப்படும். தமிழக அரசு கருநாடகத்திடமிருந்து இந்த அளவு தண்ணீரைக்கூடக் கோர வில்லை.

சனவரி 13 அன்று காவிரி ஆணையக் கூட்டம் கூடாததால், பிரதம ரிடம் பேசிய ஜெயா, கருநாடகத்திடமி ருந்து 18.8 டி.எம்.சி. நீரைப் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரினார். ஆனால், இந்த நிலையில் கூட, கருநாடகம் நியா யமாக நடந்து கொள்ள மறுத்துவிட்டது. அம்மாநில விவசாயிகளுக்குத் தண்ணீர் தேவைப்படாத நிலையில், அது அடாவ டித்தனமாகத் தேக்கி வைத்துள்ள நீரில் இருந்து பிச்சை போடுவது போல 6 டி.எம்.சி. நீரை மட்டுமே தர முடியும் எனக் கூறிவிட்டது. மைய அரசும் கருநா டகத்தின் இந்த அடாவடித்தனத்திற்கு ஒத்து ஊதிவிட்டது.

இந்த நீரை வைத்துக் கொண்டு, காவிரிப் பாசனப் பகுதியின் மேல் மடை யிலுள்ள சம்பா பயிர்களைக் கூடக் காப்பாற்ற முடியாது. தஞ்சை பகுதி விவ சாயிகளின் தற்கொலைக்கும், அகால மர ணத்திற்கும், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் பயிர்கள் காய்ந்து போனதற்கும் மைய அரசும், கருநாடக அரசும்தான் முழுப் பொறுப்பேற்க வேண்டும். ஆனால், அவர்களோ இதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

www.padippakam.com

அதேசமயம், ஜெயாவோ காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளின் அவல நிலையை பாசிஸ்டுகளுக்கே உரிய வக்கிரத்தோடும், கொழுப்போடும் அணுகுகிறார்.

**விவசாயிகளை அவமதிப்பதுதான் மக்களாட்சியா?**

கடனுக்கு மேல் கடன் வாங்கி நட்ட சம்பா பயிர் கருகிப் போனதால், கீழ் திருபுவனத்தைச் சேர்ந்த வீரையன், பாளையக்கோட்டையைச் சேர்ந்த சண்முகம், ஆவராணி புதுசேரியைச் சேர்ந்த கணேசன் ஆகிய மூன்று விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய்விட்டனர். இவர்கள் தவிர, வாழக்கரையைச் சேர்ந்த பத்மாவதி, விளாங்காடு தமிழரசன், சாத்தான் குளம் தொகுதியைச் சேர்ந்த பரமசிவம், தபோநாயகிபுரம் கிராமத்தைச் சேர்ந்த வேலுச்சாமி உட்பட எட்டு விவசாயிகள் மனமுடைந்துபோய் இறந்து போனார்கள்.

பாசிச ஜெயா அரசு இந்த அகால மரணங்களை குறைந்தபட்ச அனுதாபத்தோடு கூடப் பார்க்கவில்லை. ஒருபுறம், கருநாடகம் காவிரியில் தண்ணீர் விடாததால், தமிழகத்தின் நெற்களஞ்சியம் பாலையாக மாறி விட்டதைக் காட்டி, கிருஷ்ணாவோடும், வாஜ்பாயோடும் மல்லுக்கு நிற்கும் ஜெயா, இன்னொருபுறமோ, காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளின் சாவுகளை அவதூறு செய்கிறார்; மூடிமறைக்கப் பார்க்கிறார்.

திருபுவனம் கிராமத்தைச் சேர்ந்த வீரையன் சம்பா பயிர் கருகிப் போனதால்தான் மனமுடைந்து போய், ''பாமிடால் 40'' என்ற பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். ஆனால், பாசிச ஜெயா அரசோ, ''வீரையன் குடிகாரர்; குடிக்கக் காசு கிடைக்காமல் தான் தற்கொலை செய்து கொண்டு விட்டதாக'' அவதூறை அள்ளி வீசி, வீரையனின் மரணத்தையும், அவரது குடும்பத்தையும் கொச்சைப்படுத்தியது.

இந்த அபாண்டமான அவதூறை நிரூபிப்பதற்காக, ஜெயாவின் ஏவல் நாயான போலீசு, வீரையனின் மனைவி சின்னப்பொண்ணை மிரட்டி, வெத்து பேப்பரில் கைநாட்டு வாங்கிச் சென்றுள்ளது; உள்ளூர் அ.தி.மு.க.வைச் சேர்ந்த அழகர், ''உன் புருஷன் செத்ததை வெச்சு வம்பா பண்றீங்க'' என மிரட்டியிருக்கிறார்.

வீரையனின் பக்கத்து வயல்காரர், ''வீரையன் எந்த நேரமும் வயல்லயே கிடப்பான். அன்னிக்கி காலையில் ரெண்டு மூணு மாடுகளை வயல்ல கொண்டுவந்து விட்டு, 'நீங்களாச்சும் தின்னு தொலைங்க'ன்னுச் சொல்லி விட்டுப் போனான்'' என்கிறார். ஆனால், வீரையனின் முகம்கூடத் தெரியாத தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் கோசலராமன், ''இந்த வருடம் வீரையன் விவசாயமே செய்யவில்லை'' என அண்டப்புளுகை அவிழ்த்து விட்டுள்ளார்.

பாளையக்கோட்டை சண்முகம் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டதை மூடிமறைக்க, இதைவிடக் கேவலமாக நடந்து கொண்டது, ஜெயா அரசு. பாளையக்கோட்டை சண்முகம், ''என் வறுமை கொடுமை பசியால் - பட்டினியால் தற்கொலை செய்து கொள்கிறேன். எனது பட்டினிக்குக் காரணம் சென்ற ஆண்டு மழை வெள்ளம், ஒருபடி நெல் கிடைக்கவில்லை. 7 ஆயிரம் செலவு செய்து சாகுபடி நட்டம் ஏற்பட்டுவிட்டது. ஒரு ஆண்டு காலம் வாரவட்டி வாங்கி குடும்பம் செய்தேன். இந்த ஆண்டு விதைப்பு செய்து பட்டுப் போய்விட்டது. மீண்டும் நாத்துவிட்டு நட்டு மழை இல்லாமல் கருகிவிட்டது. மனைவி தாலிவரை விற்று அரிசி வாங்க முடியவில்லை. எனது வீட்டில் கால் பவுனுக்கு வழி இல்லை. வாரத்தில் 3 நாள் பட்டினி. 7.1.2003-ல் என் வீட்டில் கால்படி அரிசி இல்லை'' எனத் தன் கைப்பட எழுதி வைத்துவிட்டுத்தான் தற்கொலை செய்து கொண்டார்.

ஆனால் போலீசோ, ''சண்முகம் பக்கத்து தெருவுல இருக்கிற ஒரு பொம்பளை கூடத் தொடர்பு வெச்சிருந்தார்'' என்ற வதந்தியை உண்மையைப்போல் திரித்து, அதனால் சண்முகத்துக்கு அநாவசியக் கடன் ஏற்பட்டு விட்டதாகவும், அதனால் சண்முகம் தற்கொலை செய்து கொண்டதாகவும் முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, சண்முகத்தின் மரணத்தைக் கொச்சைப்படுத்தியது. மேலும், சண்முகத்தின் கடிதத்தைக் கைப்பற்றி அழித்து விட்டு, இந்தப் பொய்யை உண்மையாக்கவும் முயன்றது, போலீசு.

வேளாண் துறை அமைச்சர் ஜீவானந்தம், ''சண்முகம் வாழ்ந்த வீடு பங்களாடைப் வீடு; அவரது ஒரு மகன் சிங்கப்பூர் சென்று சம்பாதித்துவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டார்; இன்னொரு மகன் சிங்கப்பூரில் இருக்கிறார். அவரது மகள் பட்டதாரி. உண்மை நிலை இப்படியிருக்க, சண்முகம் வறுமையில் வாழ்ந்திருக்க முடியுமா?'' எனக் குதர்க்கமாகக் கேட்டு, வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினார். மேலும், இறந்து போன விவசாயிகளுள் ஒருவரும் பயிர் கருகிப் போன அதிர்ச்சியாலோ, பட்டினியாலோ இறந்து போகவில்லை எனக் கூசாமல் புளுகுகிறார்.

இறந்து போன விவசாயிகளை இப்படிக் கொச்சைப்படுத்திய பாசிச ஜெயா கும்பல், நடைப் பிணமாய் காலந்தள்ளும் விவசாயிகளை அவமதிப்பதற்காகவே இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மலையாளத்து ஜோசியன் சொல்லிக் கொண்டு வந்த கோவில் அன்னதானத்



விவசாயிகளை அவமானப்படுத்தும் மதிய உணவுத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள பழைய மண்ணை கிராம மக்கள் சத்துணவு மையம் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்தை விரிவுபடுத்தி, இலவச மதிய உணவுத் திட்டமாக மாற்றிவிட்டார், ஜெயா.

**ஜெயாவின் அவமதிப்புக்கு விவசாயிகளின் பதிலடி**

மதிய உணவிற்குப் பதிலாக, குறைந்த விலையிலாவது அரிசி கொடுங்கள் என்பதுதான் விவசாயிகளின் கோரிக்கை. ஜெயா, விவசாயிகளின் நியாயமான இந்தக் கோரிக்கையைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாததோடு, ''அரிசி, சமைத்த உணவுக்கு ஈடாகாது'' எனத் திமிராகப் பதில் அளிக்கிறார். தமிழகத்திற்கே சோறு போடும் விவசாயிகளை, ''தட்டேந்திக் கொண்டு சத்துணவுக் கூடங்களுக்கு வர வேண்டும்'' என அவமானப்படுத்திவிட்டு, இந்தப் பிச்சை போடும் திட்டத்தை ''வரலாறு காணாத ஈடு இணையில்லாத திட்டம்'' எனக் கொழுப்பெடுத்து சுயதம்பட்டம் அடித்துக் கொள்கிறார்.

ஆனால், தமிழக விவசாயிகளோ, இந்தத் திட்டத்தைத் தங்களின் தன்மானத்திற்கு விடப்பட்ட சவாலாகவே பார்த்தார்கள். மயிலாடுதுறை ஒன்றியத்தில் உள்ள மொழையூர் பஞ்சாயத்தில், ''எங்க ஊர் மக்களைத் தட்டேந்திப் பிச்சை எடுக்க வைப்பதில் இஷ்டமில்லை; இத்திட்டம் எங்கள் ஊருக்குத் தேவையும் இல்லை'' எனத் தீர்மானம் போட்டு மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அதிகார வர்க்கமோ, ''அரசு உத்தரவை நீங்க மதிக்கணும்; இல்லையென்றால், உங்க பஞ்சாயத்துக்கு எந்த அரசு நிதியும் தர மாட்டோம்'' என மிரட்டி, மதிய உணவுக்கு ஆள் பிடிக்கக் கட்டளையிட்டார்கள்.

நாகை மாவட்டம் சீர்காழியை அடுத்துள்ள நிம்மேலி கிராமத்தில் வசித்து வரும் 400-க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் ஒன்றுகூடி, மதிய உணவு டோக்கன் வாங்க மறுத்துவிட்டனர். இதனால் மேலதிகாரிகள், '' இந்தக் கிராமத்தில் பட்டினிச் சாவே வராது என எழுதிக் கொடுங்கள்'' என வற்புறுத்திப் பணிய வைக்க முயன்று, மூக்குடைபட்டார்கள்,

கரூர் மாவட்டத்திலுள்ள பூலாம்வலசு கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. பட்டாளம், ''மதிய உணவு வாங்கும் விவசாயிகளுக்குத்தான் இனி ரேஷன் கார்டு செல்லும்'' என்ற வதந்தியைப் பரப்பி, மதிய உணவுத் திட்டத்துக்கு ஆள்பிடிக்க முயன்றது.

விவசாயிகளின் கைகளில் மதிய உணவு டோக்கனைத் திணிக்க இப்படி பல்வேறு தகிடுதத்தங்களில் ஈடுபட்ட ஜெயா கும்பல், ''இத்திட்டத்தில் கிட்டத்தட்ட ஏழு இலட்சம் விவசாயிகள் சேர்ந்துவிட்டதாகவும், இது இத்திட்டத்திற்கு மக்கள் மத்தியில் கிடைத்துள்ள வரவேற்பைக் காட்டுவதாகவும்'' பீற்றிக் கொள்கிறது. ஆனால், இந்தக் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் கூடத் தாக்குப் பிடிக்கவில்லை. ஜெயாவின் இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாளன்றே படுதோல்வியைச் சந்தித்தது.

- பேராவூரணித் தொகுதியில் உள்ள சித்துக்காடு கிராமத்தில் பொங்கலுக்கு முதல் நாள் இரவே, ''எங்களுக்கு பிச்சைக்கார சாப்பாடு வேண்டாம்'' எனப் பொதுமக்களே சுவரொட்டி அடித்து ஒட்டியிருக்கிறார்கள்.

- பட்டுக்கோட்டை பகுதியில் உள்ள வேப்பநாடு கிராம விவசாயிகள் ''இலவச மதிய உணவு தேவையில்லை'' எனப் புறக்கணித்துவிட்டனர். ஏனாதி ஊராட்சி மன்றத்தின் அ.தி.மு.க. தலைவர் ரெங்கசாமி, ''நம்ம அம்மா போடுற சாப்பாட்டை வாங்க என்ன வெட்கம் வேண்டிக் கிடக்கு'' என வீடு வீடாகப் போய்க் கெஞ்சியும், விவசாயிகள் தட்டேந்திவர மறுத்துவிட்டனர்.

- ஒரத்தநாடு பகுதியில் அம்மாவின் அடியாட்கள் வீடுவீடாக ஏறிப்போய், ''இப்போ சாப்பாடு வாங்கினாத்தான் அப்புறம் அரிசி வாங்க முடியும்'' எனக் கதை விட்டும் கூட, விவசாயிகளைச் சம்மதிக்க வைக்க முடியாமல், மீந்து போன சாப்பாட்டை கொட்டிக் கவிழ்த்தார்கள்.

- திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பகுதியில் உள்ள இருபத்தெட்டு மையங்களில், பன்னிரெண்டு மையங்களில் யாருமே டோக்கன் வாங்காததால், அம்மையங்களில் மதிய உணவு சமைக்கப்படவேயில்லை.

- உதயமார்த்தாண்டபுரம், நாச்சிகுளம் சத்துணவு மையங்களில் நூற்றுக் கணக்கானோர்க்கு உணவு சமைத்து, பத்து பதினைந்து பேர் மட்டுமே வந்ததால், மீந்து போன சாப்பாட்டை மண்ணுக்குள் போட்டு புதைத்துவிட்டார்கள்.

- நாகை மாவட்டத்திலுள்ள சாட்டியக்குடி, கிள்ளுக்குடி, கொடியாலத்தூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், இம்மதிய உணவுத் திட்டம் விவசாயிகளின் புறக்கணிப்பால் படுதோல்வியில் முடிந்தது.

**அமைதியாக இருப்பதுதான் அவமானம்**

காவிரிப் பாசனப் பகுதியில் 100 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும்

## தஞ்சையில் பட்டினிச் சாவுகள்

### —ம.க.இ.க.வின் கண்டன ஆர்ப்பாட்டம்

**கருகும் விவசாயத்தைக் காப்பாற்றக் கோரியும், தற்கொலை – பட்டினிச் சாவுகளைத் தடுத்து நிறுத்தக் கோரியும் ஜெயா – கிருஷ்ணா - வாஜ்பாய் அரசுகளைக் கண்டித்தும் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் கண்டன ஆர்ப்பாட்டம் 23.01.03 அன்று தஞ்சை கீழவாசல் காமராசர் சிலை அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு தோழர் அருள் தலைமை தாங்கினார்.**

**தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகள் நிலைமை பற்றியும், அரசின் நிவாரணப் பணிகள் அவர்களுக்கு உதவவில்லை என்பதை அம்பலப்படுத்தியும் தோழர் இராவணன் உரையாற்றினார்.**

**காவிரி பிரச்சனையில் ஓட்டுக் கட்சிகளின் துரோகம் பற்றியும், காவிரி வறட்சி மட்டுமல்லாது, மறுகாலனியாதிக்கத்தால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விளக்கியும், பிரச்சினையை மூடி மறைத்துத் திசை திருப்பும் பார்ப்பன பாசிச ஜெயாவைத் தோலுரித்தும், தற்கொலைகள் தீர்வு அல்ல – பிரச்சனைகளை எதிர்த்து நின்று போராட வேண்டுமென்று விவசாயிகளுக்கு அறைகூவல் விடுத்தும் ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பனின் சிறப்புரை எழுச்சியூட்டுவதாக அமைந்தது.**

***— தகவல்: ம.க.இ.க., தஞ்சை.***





படிப்பகம்

www.padippakam.com

வீ.எஸ்.டி., கே.டி.ஆர்., ஏ.பி.எஸ்., நாடாமுத்து பிள்ளை, குன்னியூர் அய்யர், இராயந்தூர் அய்யர் போன்ற மிட்டா மிராசுகள் நடப்பு பருவத்தில் சாகுபடியில் இறங்கவில்லை. அவர்கள் அனைவரும் நிலங்களைத் தரிசாகவே போட்டுள்ளனர். வீரையன், சண்முகம், பத்மாவதி போன்ற சிறு - நடுத்தர விவசாயிகள்தான் பொண்டாட்டியின் தாலி தொடங்கி வீட்டில் இருக்கும் தவலை, குண்டானையெல்லாம் அடகு வைத்து, கடனுக்கு மேல் கடன் வாங்கி குறுவை, சம்பா சாகுபடியில் இறங்கினார்கள்.

காவிரியில் தண்ணீர்விடாமல் கருநாடகம் கழுத்தறுத்துவிட்ட பிறகு, நட்ட பயிரைக் கருகாமல் காப்பாற்ற, இவர்கள் பட்ட பாட்டைச் சொல்லி மாள முடியாது. சிறு விவசாயிகள் பலரும் வாய்க்கால், குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் நீரைக் குடங்களில் எடுத்து வந்து வயலில் ஊற்றி இருக்கிறார்கள். ''இறந்துபோன பத்மாவதி, கொஞ்ச நஞ்ச தண்ணி வந்துகிட்டு இருந்தப்ப, வாய்க்கால்ல ஓடுற தண்ணிய நாள் பூராவும் பாத்திரத்துல மொண்டு மொண்டு வயல்ல ஊத்தியதாக'' பத்மாவதியின் பக்கத்து வயல்காரர் சந்திரஹாசன் கூறுகிறார். பல நடுத்தர விவசாயிகள் செலவைப் பற்றிக் கவலைப் படாமல், டீசல் மோட்டார் போட்டு, வாய்க்காலில் தேங்கிய நீரை எடுத்து வயலில் பாய்ச்சி இருக்கிறார்கள்.

இவ்வளவு கடன் பட்டும், இவ்வளவு முயற்சி செய்தும் பயிரைக் காப்பாற்ற முடியாமல் போன பொழுதுதான் வீரையனும், சண்முகமும், கணேசனும் மனமொடிந்து தற்கொலை செய்து கொண்டார்கள். பத்மாவதியும், தமிழரசும் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இறந்து போனார்கள். மற்ற விவசாயிகளோ நடைப்பிணமாகக் காலந் தள்ளுகிறார்கள்.

''தான் கடன்பட்டாலும் பரவாயில்லை; தனது வீட்டில் குந்துமணி தங்கம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை; நிலத்தைத் தரிசாகப் போடக் கூடாது'' என்ற உயர்ந்த பண்பாடு கொண்ட விவசாயிகளை, நாக்கில் நரம்பின்றிப் பேசி அவமானப்படுத்துகிறது, பாசிச ஜெயா கும்பல். நாட்டை ஆளும் பார்ப்பனக் கும்பலோ, தஞ்சையில் விபரீதமாக எதுவுமே நடக்காததுபோல, தியாகய்யனுக்கு ஆராதனை நடத்தி, அந்த எழவை நாடெங்கும் ஒளிபரப்புகிறது.

பாசிஸ்டுகளின் இந்த அவமதிப்பை, தமிழக விவசாயிகள் மட்டும்தான் ஓரளவிற்கு எதிர்த்து நிற்கிறார்கள். மற்றவர்களோ வெறும் முணுமுணுப்போடு அடங்கிப் போய்க் கிடக்கிறார்கள். தமிழகம் இப்படி அமைதிப் பூங்காவாக இருப்பதை இனியும் அனுமதிக்க முடியாது.

பாசிச ஜெயா கும்பல் மதிய உணவு என்ற போர்வையில் விவசாயிகளை அவமானப்படுத்துவதற்கு மன்னிப்புக் கேட்பதோடு, அவர்களுக்குத் தேவையான அரிசியைப் பஞ்சம் தீரும் வரை இலவசமாகவும், வேலைக்கு உணவுத் திட்டத்தின் அடிப்படையிலும் வழங்க வேண்டும். இல்லையென்றால், மதிய உணவிற்கு எதிராக விவசாயிகள் நடத்தி வரும் போராட்டத்தை, உணவுக் கிடங்குகளைக் கைப்பற்றும் கலகமாக மாற்ற வேண்டும். தமிழகத்திற்கு உரிய தண்ணீரை காவிரியில் பெறவும்; நெல் கொள்முதல் நிறுத்தம், இலவச மின்சாரம் ரத்து ஆகிய தாராளமயத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தவும் தமிழகமெங்கும் பரந்துபட்ட மக்களின் சட்டத்தை மீறும் போராட்டங்களைக் கட்டியமைக்க வேண்டும்.

எதிர்க்கட்சிகளை நம்பி, அப்படிப்பட்ட கலகங்களை நடத்த முடியாது; பாசிச ஜெயாவின் ஆட்சிக்கு எதிராக தமிழக மக்கள் மத்தியில் பரவிவரும் வெறுப்பை, எதிர்க்கட்சிகள் அடுத்த சட்டசபை தேர்தலுக்கான ஓட்டாகதான் பார்க்கின்றன.

ஜெயாவை மாற்றி விட்டாலே தமிழக நிலைமைகள் மாறிவிடாது; தாராளமயத் தாக்குதல் நின்றுவிடாது; காவிரியில் தண்ணீரும் வந்துவிடாது. இதற்கு, தமிழக விவசாயிகளும், மக்களும் தங்களின் சொந்த பலத்தை நம்பி, புரட்சிகர அமைப்புகளில் அணி திரண்டு, சமரசமின்றிப் போராடியாக வேண்டும்! அத்தகைய போராட்டம்தான் இறந்து போன விவசாயிகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி யாகும்!

● செல்வம்

## ''பார்ப்பன பயங்கரவாதத்தை முறியடிப்போம்!''

### — புரட்சிகர அமைப்புகளின் அறைகூவல்

மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள், மதமாற்ற தடைச் சட்டம், பார்ப்பன பயங்கரவாதத்துக்கெதிரான தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டுள்ளன.

அதன் ஒரு பகுதியாக. கடந்த சனவரி 19-ஆம் தேதியன்று கர்நாடக மாநிலத்திலுள்ள கோலார் தங்க வயலில் ''பார்ப்பன பயங்கரவாதத்தை முறியடிப்போம்'' என்ற தலைப்பில் மக்கள் கலை இலக்கியக் கழகம் அரங்கக் கூட்டத்தை நடத்தியது. கூட்டத்தில்தோழர் சுந்தர், வழக்கறிஞர் எம்.என்.வெங்கடராமப்பா ஆகியோர் உரையாற்றினர். ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்ற, மறுகாலனியாக்கம் - பார்ப்பன பயங்கரவாதத்தை அம்பலப் படுத்தி யும், அதை முறியடிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துமுகமாகவும் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது.



தொழிலாளிகள் நடுவே நஞ்சென பரவி வரும் ஆர்.எஸ்.எஸ்., பி.எம்.எஸ்., பா.ஜ.க. - முதலான இந்து மதவெறி கும்பலின் மிரட்டல்களுக்கும், போலீசின் பீதியூட்டலுக்கும் எதிராகப் பல்வேறு இடையூறுகளை முறியடித்து இந்த அரங்கக் கூட்டம் நடந்தது.

'மதமாற்ற தடைச் சட்டம் - பார்ப்பன பாசிசத்தைப் பாதுகாக்கவே' என்ற தலைப்பில் டிசம்பர் 29-ஆம் தேதி புதுவையில் அரங்கக் கூட்டம் நடைபெற்றது. ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்ற, த.பெ.தி.க. புதுவை தலைவர் லோகு அய்யப்பன், சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்த தோழர் கே.முருகன், தமிழர் தேசிய இயக்கத்தின் புதுவை தலைவர் இரா. அழகிரி, விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த தோழர் ப.அமுதவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.



படிப்பகம்

# கட்டாய மதமாற்ற தடைச் சட்டம் தனிமனித உரிமை பறிப்பே!

## – கனல் வீசிய ம.உ.பா.க. கருத்தரங்கம்

தமிழக அரசு கொண்டுவந்துள்ள கட்டாய மதமாற்ற தடைச்சட்டத்தை எதிர்த்து புரட்சிகர – ஜனநாயக சக்திகள் பிரச்சார இயக்கத்தை நடத்திவரும் வேளையில், அதற்கு வலுவூட்டும் விதமாக ''கட்டாய மதமாற்ற தடைச் சட்டம் – தனிமனித உரிமை பறிப்பே!'' எனும் தலைப்பில் மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் (HRPC) கடந்த டிசம்பர் 22–ஆம் நாளன்று திருச்சியில் மாநில கருத்தரங்கத்தை எழுச்சியுடன் நடத்தியது. திருச்சி – புத்தூர் நாலுரோட்டில் உள்ள வெக்காளியம்மன் திருமண மண்டபத்தில் ம.உ.பா.க.வின் மாநிலத் தலைவரும் வழக்கறிஞருமான ம.தி.சோழர் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. திருமலை ராஜன் (செயலர், கீழமை நீதிமன்ற வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு), தோழர் நந்தலாலா (த.மு.எ.ச), திரு. நம்பியார் (தலித்சேனா), தோழர் சுப.தங்கராசு (பு.ஜ.தொ.மு.), தோழர் ஞானையா (சி.பி.ஐ.), திரு.என்.செல்வேந்திரன் (தி.மு.க), திருச்சி வழக்கறிஞர் திரு.ஒ.சகாபுதீன், ம.உ.பா.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் ராஜூ, பானுமதி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்து தேசியமே இந்திய தேசியம் என்பதையும், தாழ்த்தப்பட்டோர் இந்துக்களே அல்ல என்பதையும், சிறுபான்மையினரின் மத உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு பார்ப்பனியம் நிலைநாட்டப்பட்டு வருவதையும், உலகமயமாக்கலும் பார்ப்பனியமும் ஓரணியில் நிற்பது பற்றியும், பார்ப்பனியத்தை வீழ்த்த அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியம் பற்றியும் தொகுப்பாக ஒரு கண்ணோட்டத்தைத் தந்த இக்கருத்தரங்கம், பார்வையாளர்களைச் செயலுக்கு உந்தித் தள்ளுவதாக அமைந்தது.




''தமிழக அரசு கொண்டு வந்துள்ள கட்டாய மதமாற்ற தடைச்சட்டம் இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் 25–ஆவது பிரிவு வழங்கியுள்ள மனசாட்சி சுதந்திரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. மனசாட்சி சுதந்திரத்தின் அடிப்படையில் மதம் மாற விரும்பும் மக்களை, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களைத் தடுக்கும் நோக்கமுடையது. வர்ணாசிரம – சாதிய ஒடுக்குமுறையை நிலைநாட்டவும் சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டவும் இந்துத்துவா சக்திகளுக்குத் துணை செய்யும் இச்சட்டத்தைத் தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்'' என்பது உட்பட 11 தீர்மானங்கள் இக்கருத்தரங்கில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. பார்ப்பன பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிவரும் புரட்சிகர – ஜனநாயக சக்திகளுக்கு இக்கருத்தரங்கம் புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்துள்ளது.

— பு.ஜ. செய்தியாளர்கள், திருச்சி.


# புதிய ஜனநாயகம் வெளியீடுகள்

இப்போது விற்பனையில்....




**முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.** விலை: ரூ. 25.00

*''புதிய ஜனநாயகம்'' இதழில் வெளிவந்த தொடர் கட்டுரைகளின் தொகுப்பு.*

சி.பி.எம். வகுத்துக் கொண்டுள்ள 'புரட்சிப்பாதை'யில் அக்கட்சி எத்தனை முறை வலம் வந்தாலும் போய்ச் சேருமிடம் புறப்பட்ட இடமாகவே இருக்கிறது. இந்த உண்மையை சி.பி.எம். கட்சியின் ஆவணங்கள், அறிக்கைகள், தலைவர்களின் வாக்குமூலங்களிலிருந்தே நிரூபித்துக் காட்டுகிறது, இந்நூல்.

**மதம்: ஒரு மார்க்சிய பார்வை** விலை: ரூ. 20.00

கடவுள் – மதம் தொடர்பான கேள்விகளுக்கு விடையளிப்பதோடு, மதம் பற்றிய மார்க்சிய – லெனினியவாதிகளின் நிலைப்பாட்டையும் நடைமுறையையும் தொகுத்தளிக்கிறது, இந்நூல்.




**பிரதிகள் கிடைக்குமிடம்**

புதிய ஜனநாயகம்
110, இரண்டாம் தளம்
63, என்.எஸ்.கே. சாலை
சென்னை - 600 024.

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை
சென்னை - 600 002.

www.padippakam.com

# ஜெயா ஆதிக்கத்தில் தேர்தல்கள் கையறு நிலையில் எதிர்க்கட்சிகள்

தமிழகச்சட்டப் பேரவைக்கான சாத்தான்குளம் தொகுதி இடைத் தேர்தலைப் புறக்க ணிப்பது என்று முதன்மை எதிர்க் கட்சியாகிய தி.மு.க. முடிவு செய்துள்ளது. தி.மு.க.வின் இந்தப் புறக்கணிப்பை விட, அதற்கு அக்கட்சி கூறும் கார ணங்கள் முக்கியமானவை; தமிழக மக்கள் அக்கறைப்பட வேண்டியவை.

தேர்தல் புறக்கணிப்பு முடிவை அறி வித்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி பின்வருமாறு விளக்கமளித்தார்:

''தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான அ.தி.மு.க. இடைத்தேர்தல்களில் அதி கார அத்துமீறல்களில் ஈடுபடுகிறது. கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி வாக்குகளை விலைக்கு வாங்குகிறது. போலி வாக்குகளைத் தயாரித்துப் பயன் படுத்துகிறது.

வாக்காளர்களின் அடையாள அட்டைக்குப் பதிலாக மாற்றுச் சான்று களை ஏற்கலாம் என்ற ஏற்பாட்டைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறது. வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கள்ள ஓட்டுப் போடுகிறது. வாக்கு எண்ணும் இடங்களில் கலவரம் செய்தும் வருகிறது.

இத்தகைய மக்கள் விரோதச் செயல் களுக்குக் காவல் துறையினரையும், அடி யாட்களையும், அதிகாரிகளையும், அமைச்சர்களையும், தேர்தல் ஆணை யத்தில் உள்ள ஓரிரு அலுவலர்களையும் ஆளும் கட்சியினர் பக்கபலமாக வைத்துக் கொள்கின்றனர்.

எப்படியும் வெற்றி பெற்றுத் தீருவது என்று ஆளும் கட்சியினர் நடத்தும் வெறியாட்டத்திலிருந்து 'ஜனநாயகம்' விடுதலை பெற இயலாது என்பதை சமீப இடைத்தேர்தல்கள் மெய்ப்பித்துள் ளன.

இத்தில்லுமுல்லுகளைத் தேர்தல் ஆணையத்திடமோ, நீதிமன்றங்க ளிலோ தெரிவித்து உரிய நியாயம் பெறு வதற்கு வழியின்றி, வேண்டுமென்றே திட்டமிட்ட 'தாமதங்கள்' தடுத்து நிற்கின் றன. உடனடி நிவாரணம் இன்றி ஜனநா யகம் தவித்துத் துடித்து, தனது முடிவை எதிர்நோக்கி மூச்சுத் திணறிக் கொண்டி ருக்கின்றது''

—இவை கடந்த கால இடைத்தேர்தல் களின் அனுபவங்கள் என்று கருணாநிதி தொகுக்கிறார்.

இனி வரவிருக்கும் சாத்தான்குளம் தொகுதி இடைத்தேர்தல்களும் இப்ப டித்தான் இருக்கும் என்பதற்கான காரணங்களைப் பின்வருமாறு கூறு கிறார்:

''சாத்தான்குளம் தொகுதி வாக்காளர் பட்டியலில் இருந்து 24 ஆயிரம் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

''அத்தொகுதியில் விவசாயிகளுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தைத் தேர்தல் ஆணையம் முதலில் தடுத்து, பின்னர் அனுமதித்ததே தேர்தல் விதிகளுக்கு மாறான முறை கேட்டின் ஆரம்பம். மேலும், அதற்கான கூப்பன்களில் ''ஜெயலலிதா அரசின் திட்டம்'' என அச்சிட்டு வாக்காளர்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

அங்கு வீட்டுக்கு வீடு ஜெயலலி தாவின் படம் பதித்த கடிகாரம் இப்போதே இலவசமாகவும் பகிரங்கமா கவும் அளிக்கப்படுகிறது. தேர்தல் விதி களை மீறி அரசுப் பணிகள் அமைச்சர் களின் மேற்பார்வையில் நடைபெறுகின் றன. வாக்காளர்களின் அடையாள அட்டைக்குப் பதிலாக 16 மாற்றுச் சான்றுகளைப் பயன்படுத்தி ஆளுங்கட் சிக்கு ஆதரவாகப் போலி வாக்காளர் களைப் பயன்படுத்துவதற்கு அதிகாரி களும் தேர்தல் ஆணையமும் ஒத்து ழைக்கத் தயாராகும் நிலை உள்ளது.

அதைத் தடுத்தால், அடியாட்களும் போலீசும் ஆளும் கட்சிக்குத் துணை நிற்கும் ஏற்பாடுகளும் அமைச்சர்கள் வகுக்கும் திட்டப்படி உருவாக்கப்பட்டு விட்டன. இச்சூழலில் 'சுதந்திரமான ஜன நாயக'த் தேர்தலை அத்தொகுதியில் துளியும் எதிர்பார்க்க முடியாது.

எனவே, இந்த மக்கள் விரோத, பாசிச ஆட்சிக்கு முழுமையாக முடிவு கட்ட, ஒட்டுமொத்த மக்கள் சக்தியை ஓர ணியில் திரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டியது ஜனநாயகக் கடமையாக உள்ளது. அதனால், இப்போது தி.மு.க.வின் வலிமையையும் உழைப்பையும் சிதறவிடக் கூடாது என்பதற்காகவும் சாத்தான்குளம் இடைத்தேர்தலைப் புறக்கணிப்பது எனத் தீர்மானிக்கப் பட்டது'' என்று கரு ணாநிதி கூறி யுள்ளார்.

கடந்த ஆண்டு ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா போட்டியிட்டார். அங்கு இடைத்தேர்தல் நியாயமாகவும் ஜனநாயக – சட்டபூர்வ மாகவும் இருக்காது; ஆளும் கட்சியின் அதிகார துஷ்பிரயோகமும், அராஜ கமும் தலைவிரித்தாடும் என்ற காரணங் களைக் கூறி காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட கூட்டணி அந்த இடைத்தேர்தலைப் புறக்கணித் தது. அப்போது ஜெயலலிதாவின் மறை முக நேச சக்தியா இருந்த ம.தி.மு.கவும், ஜனநாயகக் கடமையாற்றுவதாகக் கூறி தி.மு.க.வும் ஆண்டிப்பட்டி இடைத்தேர் தலில் போட்டியிட்டன.

அதன் பிறகு வந்த அச்சிறுப்பாக்கம், சைதை, வாணியம்பாடி இடைத் தேர்தல் களின்போது, இனியாவது ஜனநாயக முறைப்படி நேர்மையான தேர்தல்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை தேர்தல் ஆணையத்தின் முன்பு வைத்து தி.மு.க. கூட்டணியும் போட்டியிட்டன. ஆனால், வாக்காளர் பட்டியல் தயா ரிக்கும் நிலையிலேயே புகுந்து தனது கைவரிசையைக் காட்டிய அ.தி.மு.க., பல ஆயிரம் போலி வாக்காளர்களைச் சேர்த்திருப்பது கையும் களவுமாகப் பிடி பட்டது. இதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளுக்கு தண்டனை என்ற பெயரில் பதவி உயர்வுதான் வழங்கப் பட்டது.

ஜெயலலிதாவின் கைக்கூலிகள் தவிர, மேற்கண்ட இடைத்தேர்தல் கேடுகள் பற்றி வாய்திறக்காத ஒரே கட்சி, அவருடன் கள்ளக்கூட்டு சேர்ந்துள்ள இந்து மதவெறி பா.ஜ.க.தான். ஜெயலலிதாவின் அதிகார முறைகேடுகள், அராஜக வன்முறை எல்லாவற்றுக்கும் நியாயபூர்வ அங்கீ காரம் கொடுக்கும் வகையில் பா.ஜ.க. செயல்படுகிறது.

ஆனால், ஜெயலலிதா கட்சியை எதிர்ப்பதாகக் கூறிவரும் பா.ஜ.க. அல்லாத எதிர்க்கட்சிகளின் நிலை என்ன? உள்ளூராட்சித் தேர்தல்களில், குறிப்பாக, சென்னை மாநகராட்சித் தேர்தல்களில் அளவில்லா அதிகார முறைகேடு – அராஜக வன்முறை வெறி யாட்டம் போட்டது ஜெயலலிதாவின்

www.padippakam.com

கிரிமினல் ரௌடிக் கூட்டம். அந்த அனுபவம் இருப்பினும் ஆண்டிப்பட்டி தேர்தலில் தி.மு.க. போட்டியிட்டது. அங்கு அ.தி.மு.க. வெறியாட்டம் அதிகரித்த அளவில் நீடித்தபோதும் சைதை, வாணியம்பாடியில் தி.மு.க. போட்டியிட்டது, அதன் ஆதரவுடன் அச்சிறுப்பாக்கத்தில் பா.ம.க. போட்டியிட்டது.

ஜெயலலிதா ஆட்சியின் கீழ் நடக்கும் ஆண்டிப்பட்டித் தேர்தல் ஜனநாயக பூர்வமாக இருக்காது என்று கூறிப் புறக்கணித்த காங்கிரசு – போலி கம்யூனிஸ்டு அணியினர், அடுத்து வந்த மேற்படி மூன்று இடைத்தேர்தல்களிலும் போட்டியிட்டன. காங்கிரசு தனது கூட்டணிக் கட்சிகளைப் போட்டியிடச் செய்து தந்திரமாக விலகிக்கொண்டது. இதற்குக் காரணம் ஜெயலலிதா கட்சியுடன் காங்கிரசுக் கட்சி கொண்டிருந்த கூடல் – ஊடல் உறவுகள் தான்.

இப்போது சாத்தான் குளம் இடைத்தேர்தலில் போட்டியிட வேண்டிய கட்டாயத்தில் காங்கிரசு, பா.ஜ.க. ஆகிய இரண்டு கட்சிகளுமே உள்ளன; அதுவும் தாம் கள்ள உறவு கொண்டுள்ள (காங்கிரசு முழுமையாக இல்லாவிட்டாலும், அதன் "கோஷ்டி" – குழுக்களில் சில ஜெயலலிதா கட்சியிடம் கள்ள உறவு கொண்டுள்ளன) அதிமுகவுக்கு எதிராகப் போட்டியிட வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளன. இதற்கு அவர்கள் கூறும் காரணம் கடந்த பொதுத் தேர்தல்களில் திமுக அணியில் போட்டியிட்டு பா.ஜ.க. தோற்றது; அ.தி.மு.க. அணியில் போட்டியிட்டு காங்கிரசு வெற்றிபெற்றது. தமிழகத்தில் தாங்கள் இருப்பதைக் காட்டிக் கொள்வதற்கே இவை மீண்டும் சாத்தான்குளத்தில் போட்டியிட வேண்டியுள்ளது.

"தோல்வி நிச்சயம் என்பதால்தான் இடைத்தேர்தலைத் தி.மு.க. புறக்கணிக்கிறது" என்று அக்கட்சியின் எதிரிகளும் பத்திரிகைகளும் காரணம் கூறுகின்றன. இதன் மூலம் தேர்தலைப் புறக்கணிப்பதற்காக தி.மு.க. முன்வைக்கும் காரணங்களை – நியாயங்களை மூடிமறைக்கவே அவை எத்தனிக்கின்றன. ஆனால், புறக்கணிப்புக்கு கருணாநிதி கூறும் காரணங்கள் இவைதாம்:

ஜெயலலிதாவின் பாசிச ஆட்சி – கூட்டாட்சியின் கீழ் எந்தவொரு இடைத் தேர்தலும் ஜனநாயக பூர்வமாகவும் – சட்டபூர்வமாகவும் – நியாயம், நேர்மையுடனும் நடக்காது. அக்கட்சியும் ஆட்சியும் திட்டமிட்டு அதிகாரமுறைகேடுகளிலும், அராஜக வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர். சாதாரண முறைகளிலும் அவற்றை எதிர் கொள்ள முடியாது.

அரசு அதிகாரிகளும், போலீசுத் துறையும், தேர்தல் ஆணையமும் இதற்கு உடந்தையாக செயல்படுகின்றன.



தேர்தல் ஆணையத்திடமோ, நீதிமன்றங்களிடமோ முறையிட்டாலும் உரிய நியாயம் பெறுவதற்கு வழியில்லை. வேண்டுமென்றே, திட்டமிட்டு தாமதப்படுத்தப்படுகிறது. மொத்தத்தில் ஜனநாயகம் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறது.

இடைத் தேர்தலில் போட்டியிட்டு வலுவையும் உழைப்பையும் சிதறவிடக் கூடாது. ஜெயலலிதாவின் மக்கள் விரோத பாசிச ஆட்சிக்கு முழுமையாக முடிவுகட்ட ஒட்டுமொத்த மக்கள் சக்தியை ஓரணியில் திரட்ட வேண்டிய கடமையுள்ளது.

சரி, இந்த மக்கள் விரோத பாசிச ஆட்சிக்கு முழுமையாக முடிவு கட்டுவதற்கு தி.மு.க. என்ன செய்யப் போகிறது? மேற்படி இந்தக் காரணங்கள் இடைத்தேர்தல்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்பதில்லை. பொதுத் தேர்தல்களுக்கும் பொருந்தும். அப்படி என்றால் பொதுத் தேர்தல்களை கருணாநிதி எப்படிச் சந்திக்கப் போகிறார்? தமிழ்நாடு முழுவதும் தேர்தல்கள் நடக்கும் போது இடைத்தேர்தல்களில் செய்யும் அளவுக்கு அதிகார முறைகேடுகளையும் அராஜக வன்முறைகளையும் ஜெயலலிதா கும்பலால் நடத்தமுடியாது என்கிற நம்பிக்கைதான் கருணாநிதிக்கு உள்ளது.

ஆனால், ஜெயலலிதா கும்பலின் அராஜக வன்முறை மட்டுமல்ல, அரசு எந்திரமும் அதிகாரிகளும் போலீசும், நீதிமன்றங்களும் தேர்தல் ஆணையமும் "வேண்டுமென்றே திட்டமிட்டு" அதற்கு உடந்தையாக இருக்கும்போது என்ன செய்வது? சிறு அளவில் நடக்கும் தேர்தலில்தான் இப்படியெல்லாம் நடக்கிறது, பெரும் அளவில் நடக்கும் தேர்தல்களில் நடக்காது என்பது மூட நம்பிக்கையா? கையாலாகாத்தனமா? மக்கள் விரோத பாசிச ஆட்சிக்கு ஜனநாயகபூர்வமாக முடிவு கட்ட முடியுமா?

இப்படிப்பட்ட கேள்விகள் எழும் என்பதாலேயே, ஜெயலலிதா ஆட்சியில் நடக்கும் தேர்தல் அராஜகம் உட்பட அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று சகித்துக் கொள்வது என்று போலி கம்யூனிஸ்டுகள் முடிவு செய்துள்ளனர். நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு வலதுசாரிகளிடம் இருந்து ஆபத்து வருவதால், "எப்படியாவது" அதைக் காப்பது என்பதுதானே அவர்களின் முடிவு?

மொத்தத்தில், பார்ப்பன – பாசிச ஜெயலலிதா ஆட்சி விடும் சவால்கள் எதையுமே சந்தித்து, உண்மையில் எதிர்த்துப் போராடும் திரணற்ற நிலையிலேயே ஓட்டுக்கட்சிகள் உள்ளன என்பதே இப்போதைய நிலை. இதற்கு சாத்தான்குளம் இடைத்தேர்தல் இன்னொரு எடுத்துக்காட்டாக உள்ளது.

● மாணிக்கவாசகம்


படிப்பகம்

www.padippakam.com

# இசுலாமிய மதப் போர்வையில் தீவிரவாதிகளின் வெறிச் செயல்கள்

பனி படர்ந்த காசுமீர் மாநிலத்தின் ராஜோரி மாவட்டத்தைச் சேர்ந்த ஹசியோட் கிராமம். கடுங்குளிரால் அந்தக் கிராமம் நடுங்கிக் கொண்டிருந்தது. அன்று டிசம்பர் 19–ஆம் நாள். அக்கிராமத்தைச் சேர்ந்த கலீல் அகமதுவின் குடும்பம் இரவு உணவை முடித்துவிட்டு, உறங்குவதற்கு முன் அளவளாவிக் கொண்டிருந்தது. திடீரென கதவு தட்டப்படும் சப்தம். வெளியே 5–6 இசுலாமியத் தீவிரவாதிகள் முகத்தை மறைத்துக் கொண்டு கையிலே துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தனர். அஞ்சி நடுங்கியபடியே கலீல் அகமது கதவைத் திறந்தார். பாய்ந்து வந்த தீவிரவாதிகள், துப்பாக்கி முனையில் அக்குடும்பத்தைச் சுற்றி வளைத்தனர். கலீல் அகமதுவின் மகளான தாஹிரா பர்வீன் என்ற 18 வயதான +2 படிக்கும் மாணவியைப் பிடித்து இழுத்துக் கொண்டு இரு தீவிரவாதிகள் இருளிலே மறைந்தனர். ''அரே அல்லா!'' என்று அலறியது கலீல் அகமதுவின் குடும்பம். ''வாயைத் திறக்காதே! கூச்சல் போட்டால் உங்கள் அனைவரையும் சுட்டுப் பொசுக்கி விடுவோம்!'' என்று அச்சுறுத்தியது அத்தீவிரவாத கும்பல். விக்கித்து நின்றது அக்குடும்பம்!

தீவிரவாதிகளில் ஒருவன் மட்டும் அக்குடும்பத்தாரைத் துப்பாக்கி முனையில் நிறுத்திக் கொள்ள மற்றவர்கள் அடுத்த வீட்டிற்குள் புகுந்தனர். அது முகமது சாதிக் என்பவரது வீடு. அவரது மகளும் தாஹிரா பர்வீனின் பள்ளித் தோழியுமான நௌரீன் கௌன்சர் என்ற மாணவியை அத்தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். அதன் பிறகு அவர்கள் முகமது ரபிக் என்பவரது வீட்டில் புகுந்து பள்ளி மாணவியான அவரது மகள் ஷேநாஸ் அக்தரைச் சுட்டுக் கொன்று விட்டு இருளிலே மறைந்தனர்.


பெற்ற மகளைத் தமது கண்முன்னே பறிகொடுத்த துயரத்தில் அக்குடும்பங்கள் அழுது புலம்பின. தனது மகளைத் தேடி கலீல் அகமது அழுதுகொண்டே ஓடினார். கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் தாஹிரா பர்வீன் கழுத்து அறுக்கப்பட்டு பிணமாகக் கிடந்தார். அந்த கோரத்தைப் பார்த்து அலறியபடியே கலீல் அகமது மயங்கிச் சரிந்தார்.

ஹசியோட் கிராமத்தில் நடந்த இக்கோரச் சம்பவத்திற்கு இருநாட்கள் முன்னதாக கோபல்போரா பகுதியைச் சேர்ந்த பள்ளி ஆசிரியரான முகமது ஷபியும் அவரது இரு மகள்களும் இசுலாமியத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இசுலாமியத் தீவிரவாதிகள் இந்த முசுலீம்களைச் சுட்டுக் கொல்ல காரணம் என்ன? அவர்கள் காசுமீர் விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தார்களா? இல்லை. அவர்கள் இந்திய அரசு பயங்கரவாத இராணுவம் - போலீசுக்கு ஆள்காட்டிகளாக மாறித் துரோகமிழைத்தார்களா? அதுவுமில்லை. எனில், அவர்கள் சுட்டுக் கொல்லப்பட வேண்டிய காரணமென்ன? ''அவர்கள் இசுலாமிய ஒழுக்கம் – கட்டுப்பாடு நெறிகளை மீறிவிட்டார்கள்; என வேதான் அவர்கள் தண்டிக்கப்பட்டனர்'' என்கின்றனர், இசுலாமியத் தீவிரவாதிகள்.

ராஜோரி மாவட்டத்தில் அண்மைக் காலமாக இசுலாமியத் தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டு - உத்தரவுகளைச் சுவரொட்டிகளாக ஒட்டி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். ''வீட்டை விட்டு வெளியே வரும் பெண்கள் கட்டாயமாக பர்தா அணிந்து வர வேண்டும். கடைவீதிக்கு வரும் பெண்கள் பர்தா அணிந்து ஒரு ஆண் துணையுடன் வரவேண்டும். இசுலாமிய மரபுப்படி இளம் சிறுமிகளுக்கு 15 வயதில் திருமணம் நடத்தி முடித்துவிட வேண்டும். அரசாங்க போலீசு வேலையில் சேர்ந்துள்ள பெண்கள் உடனடியாக அவ்வேலையிலிருந்து விலகி விடவேண்டும். இசுலாமிய மரபுப்படி ஆண்கள் தாடி – மீசையை மழிக்கவோ சவரம் செய்து கொள்ளவோ கூடாது.''

இவையும் இன்னும் பல உத்தரவுகளையும் கொண்ட சுவரொட்டிகளை ஒட்டி லஸ்கர் ஜப்பார் குழு, அல்பிதார் குழு, ஹர்கத் உல் ஜிகாத் இசுலாமி முதலான இசுலாமிய தீவிரவாதக் குழுக்கள் அவ்வப்போது மக்களுக்கு எச்சரிக்கையும் விடுத்து வருகின்றன. பர்தா அணியாமல் சீருடை அணிந்து பள்ளிக்குச் சென்ற 'குற்றத்திற்காக', கடந்த நவம்பரில் தர்ஹால் கிராமத்து மேல்நிலைப்பள்ளி மாணவிகள் சிலரது புத்தகங்களைப் பிடுங்கித் தீவிரவாதிகள் தீயிட்டு எரித்தனர். 15 வயதில் திருமணமாகாத மாணவிகளின் மூக்கை அறுப்போம் என்று எச்சரித்தனர். இதனால் பீதியடைந்த பெற்றோர்கள் தமது பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதைப் படிப்படியாக நிறுத்திவிட்டனர். இருப்பினும், ஒருசில சிறுமிகள் தொடர்ந்து பள்ளிக்குச் சென்று வந்தனர். தமது உத்தரவுகளை மீறி, பர்தா அணியாமலும் 15 வயதில் திருமணமாகாமலும் பள்ளிப் படிப்பைத் தொடரும் மாணவிகளுக்கு எச்சரிக்கை விடுத்து மிரட்டிப் பணிய வைக்கும் நோக்கத்தோடுதான் இசுலாமியத் தீவிரவாதிகள் ஹசியோட் கிராமத்தில் 3 மாணவிகளைக் கோரமாகக் கொன்றொழித்துள்ளனர். இதன் மூலம் இத்தீவிரவாதிகள் தாங்கள் தாலிபான்களின் வாரிசுகள் என்பதைப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.



இசுலாமிய ஒழுக்கம் – கட்டுப்பாடு என்ற பெயரில் திணிக்கப்படும் பர்தாவை எந்தவொரு இசுலாமியப் பெண்ணும் சுய விருப்பத்துடன் அணிவதில்லை. உண்மையில் அது


படிப்பகம்

www.padippakam.com

பெண்களுக்கு சௌகரியமான ஆடையும் அல்ல. குறிப்பாக, காசுமீரத்துப் பெண்கள் கடுமையான விவசாய வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. தண்ணீர் தூக்கி வருவது, விறகு பொறுக்குவது முதலானவற்றையும் செய்ய வேண்டியுள்ளது. பர்தா அணிந்து கொண்டு எவராலும் இந்த வேலைகளைச் செய்ய முடியாது. இருப்பினும் இசுலாமிய ஒழுங்கு – மரபு – கட்டுப்பாடு என்ற பெயரில் பெண்கள் மீது கட்டாயமாக பர்தா திணிக்கப்படுகிறது. அதை மீறுவோர் தீவிரவாதிகளால் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

இசுலாமிய ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் மீறிவிட்டதாகக் குற்றம் சாட்டி தமது இசுலாமிய சகோதர – சகோதரிகளைத் தண்டிக்கும் இத்தீவிரவாதிகள், பர்தா விவகாரத்தோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. நவம்பர் 2001–இல் 57 வயதான பள்ளி ஆசிரியர் குல்சார் லோனே, அலால் கிராமத்தின் நடுநிலைப் பள்ளியில் பட்டப்பகலில் பலநூறு மாணவர்கள் முன்னிலையில் கோரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். காரணம், அவர் தனது மகளுக்கு இருசக்கர மோட்டார் வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுத்தார். இசுலாமிய மார்க்கத்தின் படி, பெண்கள் வாகனம் ஓட்டுவது கூட மதக்கட்டளையை மீறும் செயல் என்று குற்றம்சாட்டி தீவிரவாதிகள் இக்கொலையை நியாயப்படுத்தினர்.

இந்த இசுலாமியத் தீவிரவாதிகள், காசுமீர் விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைக்கும் பாக். ஆதரவு பெற்ற கைக்கூலிப் படையினராவர். காசுமீர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்பி, மத அடிப்படையிலான போராட்டமாக மாற்றும் நோக்கத்துடன் சீர்குலைவு – சதி வேலைகளில் ஈடுபட்டு வரும் பயங்கரவாதிகள்தான் இவர்கள்.

இவர்களது ''பட்வா''களும் (உத்தரவுகளும்) தண்டனைகளும் இசுலாமிய மத நம்பிக்கையின் அடிப்படையிலானதும் அல்ல. ஷாரியத் உட்பட இசுலாமியக் கோட்பாடுகளைத் தமது வசதிக்கேற்ப வியாக்கியானம் செய்து கொள்ளும் பித்தலாட்டக்காரர்கள்தான் இவர்கள்.

காசுமீர் விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்தோடு, இந்து மதத்தைச் சேர்ந்த அப்பாவி கூலித் தொழிலாளர்களை குடும்பத்தோடு சுட்டுக் கொன்று பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட இவர்கள், இப்போது இசுலாமியர்களுக்கு மதக் கட்டளைகள் விதித்து மரண தண்டனைகளை நிறைவேற்றக் கிளம்பியுள்ளனர்.

காசுமீர் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும் ஒவ்வொரு இசுலாமியரும் இக்கைக்கூலி தீவிரவாதிகளை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தி முறியடிக்க வேண்டும். இல்லையேல், அது காசுமீரின் சுயநிர்ணய உரிமையை கொடூரமாக ஒடுக்கிவரும் இந்திய அரசு பயங்கரவாதிகளுக்கும் இந்து வெறியர்களுக்குமே சாதகமாக முடியும். இத்தீவிரவாதிகள் விதிக்கும் கட்டளைகளும் தண்டனைகளும் ஏதோ இசுலாத்தின் புனிதத்தைக் காக்கும் நடவடிக்கை என்று இன்னமும் சில இசுலாமியர்கள் நம்புவார்களேயானால், அது அவர்களின் சுய அழிவுக்கே வழிவகுக்கும்.

● குமார்

# இசுலாமிய ஆட்சி: தீர்வா? தண்டனையா?

இந்தியா வசமுள்ள ஜம்மு–காசுமீரில் செயல்படும் ஹிஸ்புல் முஜாகிதீன், லஸ்கர்–இ–தொய்பா உள்ளிட்ட பல்வேறு இசுலாமியத் தீவிரவாத அமைப்புகள் காசுமீர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு ஜம்மு–காசுமீர் பகுதியை பாகிஸ்தானோடு இணைப்பதுதான் என்கின்றன. அப்படி இணைத்துவிட்டால், அதன் பின் ஒன்றுபட்ட காசுமீர் பூலோக சொர்க்கமாகிவிடும் என்பது போல பேசிக் கொண்டு திரிகின்றன.

ஆனால், உண்மையோ இதற்கு நேர்மாறாக இருக்கிறது. பாகிஸ்தான் வசமுள்ள ஆசாத் காசுமீரில் உள்ள கில்ஜிட், பால்டிஸ்தான் பகுதிகள், போர்தந்திர முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதால், அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படையான ஜனநாயக உரிமைகள் அனைத்தும் மறுக்கப்படுகின்றன. பாக். இராணுவ சர்வாதிகாரி முஷாரப் சமீபத்தில் பாகிஸ்தானில் ஒரு போலித் தேர்தலை நடத்தினார். அப்படிப்பட்ட போலித் தேர்தல்கள் கூட கில்ஜிட், பால்டிஸ்தான் பகுதியில் நடைபெறவில்லை. கவர்னரின் தலைமையில் மிகவும் பச்சையான இராணுவ சர்வாதிகார ஆட்சிதான் நடைபெறுகிறது. இந்த இராணுவ பாசிசத்திற்கு எதிரான மக்களின் போராட்டங்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டதோடு, இப்பகுதிகளைச் சேர்ந்த அரசியல் கட்சி தலைவர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட 152 பேரை தடுப்புக் காவலில் சிறையில் அடைத்துவிட்டது, பாக். அரசு.

இசுலாமிய ஆட்சியில்தான், இசுலாமியர்கள் நிம்மதியாக வாழ முடியும் எனப் பல்வேறு முசுலீம் தீவிரவாத அமைப்புகள் பிரச்சாரம் செய்வதை, இந்த அடக்குமுறைகள் தவிடுபொடியாக்கி வருகின்றன. பாகிஸ்தான் இசுலாமியக் குடியரசு, காசுமீர் முஸ்லீம்களின் போராட்டங்களை மட்டுமல்ல, தனது சொந்த நாட்டு முசுலீம் மக்களின் போராட்டங்களைக் கூடச் சகித்துக் கொள்வது கிடையாது.

பாகிஸ்தானின் வளமான பகுதியான பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஒகாரா, ரீனால் குர்த், பீருவால்-கானிவால் மாவட்டங்களில் நிலச்சீர்திருத்தத்தை அமல்படுத்தக் கோரி, அரசுக்கு எதிராக கூலி - ஏழை விவசாயிகளின் கலகங்கள் நடந்து வருகின்றன. பீருவால்–கானிவால் மாவட்டப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தங்களின் போராட்டத்தின் ஒரு பகுதியாக, விளைச்சலில் ஒரு பகுதியை வரியாக அரசுக்குக் கொடுப்பதைச் செலுத்த மறுத்துவிட்டனர். இதனால், ஏழு கிராமங்களைச் சுற்றி வளைத்த போலீசார், அக்கிராமங்களுக்குச் செல்லும் தொலைபேசி மற்றும் தண்ணீர் இணைப்புகளைத் துண் டித்து, முசுலீம் விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்க முயன்றனர்.

பஞ்சாப் குத்தகை விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த 27 தலைவர்களை அம்மாநில அரசு கைது செய்ததையடுத்து, ஒகாரா மாவட்ட நிர்வாக அலுவலகம் முன் 30,000 விவசாயிகள் கூடி, ஆர்ப்பாட்டம் நடத்தி, அத்தலைவர்களை விடுதலை செய்ய வைத்தனர். இதையடுத்து ஒகாரா மாவட்டம் முழுவதும் 5,000 போலீசார் இறக்கிவிடப்பட்டனர். போலீசுக்கும், குத்தகை விவசாயிகளுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் 6 குத்தகை விவசாயிகள் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கும் அதிகமான குத்தகை விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டுள்ளனர்.

இசுலாமிய மக்களின் பிரச்சினையை இசுலாமிய மத ஆட்சியில் தீர்த்துவிடலாம் என இசுலாமிய தீவிரவாத அமைப்புகள் பிரச்சாரம் செய்வது மோசடியானது; அது, முசுலீம் மக்களுக்கு இன்னுமொரு தண்டனையாகும் என்பதைத்தான் இப்போராட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

## ஆக்கிரமிப்புப் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள்:

# அஞ்சி நடுங்கட்டும் அமெரிக்கா!

சனவரி 27-க்குப்பின், உடனடியாக ஈராக் மீது ஓர் அதிரடித் தாக்குதலைத் தொடுத்து, சதாம் உசேனைத் துரத்தியடித்துவிட்டு, அந்நாட்டை விழுங்கிவிடலாம் என அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் ஆசைக் கனவு கண்டு கொண்டிருந்தார். அவரின் கனவு நிறைவேறுவது இப்பொழுது உடனடி சாத்தியமில்லாமல் போய்விட்டது. தனது உடனடி போர்த்திட்டத்தை எதிர்க்கும் நாடுகளின் புத்தி கெட்டுப் போய்விட்டதாக ஜார்ஜ் புஷ் புலம்பத் தொடங்கி விட்டார். திருவிளையாடல் படத்தில் பாண்டியனின் பரிசு கிடைக்காமல், ''தனியா புலம்ப விட்டு விட்டானே'' என விரக்தியடைந்து பேசும் தருமியின் நிலை போல் ஆகிவிட்டது, பெரியண்ணன் ஜார்ஜ் புஷ்ஷின் நிலை.

ஐரோப்பாவின் வலிமை மிகுந்த நாடுகளான பிரான்சும், ஜெர்மனியும் கூட்டாக இணைந்து, அமெரிக்கா ஈராக் மீது உடனடியாக, தன்னிச்சையாக அதிரடி போரைத் தொடங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மேலும், ''ஈராக் நாட்டில் நடந்து வரும் ஆயுதப் பரிசோதனையின் கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும்; ஈராக் மீது போர் தொடுப்பது பற்றி பாதுகாப்பு கவுன்சில்தான் முடிவெடுக்க வேண்டும்'' என அவ்விரு நாடுகளும் அறிவித்துள்ளன. ''அமெரிக்காவின் உடனடி போர்த் திட்டத்தை எதிர்க்க, பிரான்சு, தனது ரத்து அதிகாரத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் பயன்படுத்தும் என பிரான்சு நாட்டு அதிபர் அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலும் தற்பொழுது இப்பிரச்சினையில் பிளவுபட்டு நிற்கிறது, பாதுகாப்பு கவுன்சிலின் ரத்து அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பு நாடுகளான ரசியாவும், சீனாவும் பிரான்சை ஆதரிக்கின்றன. மற்றொரு நிரந்தர உறுப்பு நாடான இங்கிலாந்து மட்டும்தான் அமெரிக்காவின் உடனடி போர்த் திட்டத்தை ஆதரிக்கிறது. ஐரோப்பா கண்டத்தை எடுத்துக் கொண்டால், இங்கிலாந்து, இத்தாலி ஸ்பெயின் ஆகிய மூன்று நாடுகள் தவிர்த்து, வேறு எந்தவொரு நாடும் அமெரிக்காவின் உடனடி போர்த் திட்டத்தை ஆதரிக்கவில்லை.

சிரியா, ஜோர்டான், ஈரான், சௌதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகள் துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் கூடி விவாதித்து, ''அமெரிக்கா உடனடியாக ஈராக் மீது போர் தொடுப்பதைக் கைவிட வேண்டும்; ஆயுத பரிசோதனைக் குழுவிற்கு இன்னும் கால அவகாசம் கொடுக்க வேண்டும்'' எனக் கோரியுள்ளன. ஈராக் மீது தாக்குதல் தொடுக்க தனது நாட்டை அமெரிக்கத் துருப்புகள் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என ஜோர்டான் கூறிவிட்டது. ''மிகவும் குறைவான அமெரிக்கத் துருப்புகளைத் தான் தனது நாட்டினுள் அனுமதிக்க முடியும்'' என துருக்கி கூறியிருக்கிறது. இதனால், மும்முனைகளில் இருந்து ஈராக்கைத் தாக்க திட்டம் போட்ட அமெரிக்காவின் எண்ணத்தில் மண் விழுந்துவிட்டது.

பிரான்சு, ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகளும் ஜோர்டான், சௌதி அரேபியா போன்ற அமெரிக்காவின் அடிவருடி நாடுகளும் ஈராக் மீதான போரைக் கைவிட வேண்டும் எனக் கூறாவிட்டாலும், உடனடியாகப் போர் தொடுக்கக் கூடாது என அமெரிக்காவிற்குப் போதனை சொல்வதற்குக் காரணம் என்ன? இந்த நாடுகளுக்கு, இந்தத் திடீர் ஞானோதயம் எதனால் ஏற்பட்டது?

கச்சா எண்ணெய்க்காகவே அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக்கத் துடிக்கிறது என்பதை அம்பலப்படுத்தி ஜெர்மனியில் கிரீவ்ஸ்வால்டு நகரில் நடந்த கையெழுத்து இயக்கம்.




அமெரிக்கா தன்னிச்சையாகப் போர் தொடுத்தால், இந்நாடுகளின் அரசியல் – பொருளாதாரம் ஓரளவு பாதிக்கப்படும் என்றாலும் கூட, இன்று உலகின் பல்வேறு நாடுகளை மேலாதிக்க போர் எதிர்ப்புப் பூதம் பிடித்தாட்டுகிறது. இந்தப் பூதத்தைப் பார்த்துதான் இந்த நாடுகள் அஞ்சி நடுங்குகின்றன. அமெரிக்காவின் உடனடியான, அதிரடிப் போரை ஆதரித்தால், உள்நாட்டில் அம்பலப்பட்டுத் தனிமைப்படுவோம் என்ற அச்சத்தின் காரணமாகவே, போரை உடனடியாகத் தொடங்க வேண்டாம் என இந்த நாடுகள் அமெரிக்காவைக் கெஞ்சுகின்றன. இந்தப் போர் எதிர்ப்பு பூதம் அமெரிக்காவையும், இங்கிலாந்தையும்கூட விட்டு வைக்கவில்லை.

● துருக்கி நாட்டின் மனித உரிமை அமைப்புகள், அந்நாட்டில் ''நேடோ'' இராணுவத் தளம் அமைந்துள்ள இன்சிர்லிக் நகரில் சனவரி 24-ஆம் தேதி பிரம்மாண்டமான போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தின.



படிப்பகம்

www.padippakam.com




**துருக்கியில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தைக் காலி செய்யக் கோரி இஸ்தான்புல் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.**

● அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் அதிபர் மாளிகையின் முன் சனவரி 18 அன்று போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. பின்னர் இந்த ஆர்ப்பாட்டமே போர் எதிர்ப்பு பேரணியாகவும் மாறியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பாதிரியார் ஒருவர், "உலகுக்கு அச்சுறுத்தலாக இருப்பது ஈராக் அல்ல; அமெரிக்காதான்!" என்றார்.

● சனவரி 18–ஐ மேலாதிக்க போர் எதிர்ப்பு தினம் எனக் குறிப்பிடுமளவு, அன்றைய தினம் அமெரிக்காவில் மட்டுமல்லாது, உலகின் பல்வேறு நாடுகளில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அமெரிக்க அடிவருடி நாடான பஹ்ரைனில் சனவரி 18 அன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் இரண்டாயிரம் பேர் பங்கேற்றனர். சனவரி 18 அன்று பாலஸ்தீனத்தில் உள்ள காசா நகரில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் நடந்தது. பிரேசில் நாட்டில் அமெரிக்கத் தூதரகத்தின் முன் நடந்த ஆர்ப்பாட்டத்தில், அமெரிக்கக் கொடிகள் எரிக்கப்பட்டன.

● இங்கிலாந்தின் ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சி இலண்டனில் நடத்திய கருத்தரங்கில் பிரதமர் டோனி பிளேயர் பேச எழுந்த பொழுது, இயான் வில்சன் என்ற மாணவர் டோனி பிளேயரைப் பேச விடாமல் தடுத்து, அவரின் போர் வெறியை அம்பலப்படுத்தியிருக்கிறார். போலீசார் அம்மாணவனைக் குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியேற்றிய பிறகுதான் டோனி பிளேயரால் கருத்தரங்கில் உரையாற்ற முடிந்தது. அக்கருத்தரங்கம் நடந்த இடத்தைச் சுற்றிலும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்ததால், டோனி பிளேயரை மக்களின் கோபத்தில் இருந்து பாதுகாப்பதே போலீசுக்கு பெரும்பாடாகி விட்டது. அமெரிக்காவைப் போன்று இங்கிலாந்து தலைநகர் இலண்டனிலும் சனவரி 18 அன்று போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

● 1991-ஆம் ஆண்டு நடந்த வளைகுடாப் போரில் கலந்து கொண்ட கென்னத் நிக்கோலஸ் என்ற முன்னாள் அமெரிக்க போர் வீரர், அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக்குமானால், அம்மக்களைக் காப்பாற்ற, ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் சேர்ந்த 200 தன்னார்வத் தொண்டர்கள் மனிதச் சங்கிலியாக ஈராக்கினுள் நுழைவோம் என அறிவித்திருக்கிறார்.

இந்தப் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஒருபுறமிருக்க, பிரான்சு நாட்டில் வாழும் அரபு முசுலீம்கள் அமெரிக்கப் பொருட்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தை நடத்தி வருகின்றனர். உலகெங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க முத்திரையாகப் பார்க்கப்படும் கோகோ – கோலாவிற்குப் பதிலாக, மெக்கா – கோலா என்ற குளிர்பானம் பிரான்சு நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, அரபு முசுலீம்களிடையே பிரபலமாகிவிட்டது. ஐக்கிய அரபு நாடுகளில் ஸ்டார் கோலாவும், ஈரானில் ஜாம் ஜாம் கோலாவும் இப்பொழுது கோக் – பெப்சியின் விற்பனையை வீழ்த்திவிட்டன.

அமெரிக்கக் கூட்டாளி நாடுகளின் எதிர்ப்பு; அடிவருடி நாடுகளின் எதிர்ப்பு கலந்த முணுமுணுப்பு; ஈராக் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதை நிரூபிக்க இன்னும் ஒரு ஆதாரத்தைக் கூடக் கண்டுபிடிக்க முடியாமல் ஆயுதப் பரிசோதனைக் குழு திணறுவது – இவற்றால், அமெரிக்கா ஈராக் மீது உடனடியாகப் போரைத் தொடங்க முடியாமலும், போரைக் கைவிட முடியாமலும் ஆப்பசைத்த குரங்காக மாட்டிக் கொண்டு முழிக்கிறது.

பத்தாண்டுகளுக்கு முன்பு சோவியத் யூனியன் வீழ்ந்த போது, உலகின் இரட்சகனாக முடிசூட்டிக் கொண்ட அமெரிக்கா, இன்று, தனது மேலாதிக்கப் போர் வெறியை நியாயப்படுத்த முடியாமல், உலக மக்களிடமிருந்து தனிமைப்பட்டு நிற்கிறது. உலகெங்கிலும் நடைபெறும் இம்மேலாதிக்க போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேலாதிக்க அமெரிக்காவின் வீழ்ச்சி தொடங்கிவிட்டதை எடுத்துக் காட்டுகின்றன.

● இராசு


**அமெரிக்காவின் போர்வெறிக்கு எதிராக அமெரிக்க நாட்டினர், ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com



### தனிக்குவளை, கொத்தடிமைத்தனம், பாலியல் வன்கொடுமை

# விளக்கப்பாடியில் வன்னிய சாதிவெறியர்களின் கொட்டம்

''எல்லோரும் கனவு காணுங்கள். அப்போதுதான் கி.பி. 2020-ல் வளமான இந்தியாவை உருவாக்க முடியும்!'' — இது காஞ்சி சங்கராச்சாரியின் அருள்வாக்கு அல்ல. இந்தியக் 'குடியரசு' தலைவர் அப்துல் கலாம் ஊர் ஊராகச் சென்று இளைஞர்களுக்குச் சொல்லும் அறிவுரை.

வளமான இந்தியாவை உருவாக்குவது இருக்கட்டும். இன்றைய இந்தியாவின் உண்மையான முகமென்ன? திண்ணியத்தில் தாழ்த்தப்பட்ட முருகேசன் வாயில் மலத்தைத் திணித்ததும், கவுண்டம் பாளையத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சங்கன் வாயில் சிறுநீர் கழித்து அவமானப்படுத்தியதும், அரியானாவில் செத்த பசுமாட்டுத் தோலுரித்ததற்காக ஐந்து தாழ்த்தப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதும் – கிராமங்களில் புரையோடிப் போயிருக்கும் சாதி-தீண்டாமையின் கொடூரத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த சமீபத்திய நிகழ்வுகள். அதன் தொடர்ச்சியாக ஆதிக்க சாதி வெறியாட்டத்தின் இன்னமொரு கீழ்த்தரமான பக்கத்தைக் காட்டுவதுதான் விளக்கப்பாடி கிராமம்.

விளக்கப்பாடி, விருத்தாச்சலம் அருகிலுள்ள சிறு கிராமம். இக்கிராமத்தில் நிலத்துக்குச் சொந்தக்காரர்களான வன்னியர்கள்தான் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இவர்களது நிலத்தில் கூலிவேலை செய்துவரும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த முப்பது குடும்பங்கள் இரண்டு சேரிகளில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு உரிய சாலை வசதியோ, தண்ணீர் வசதியோ இல்லை. ஆளுக்கொரு செல்போன் கொடுக்குமளவுக்கு தகவல் தொழில் நுட்பப் புரட்சி நடந்து கொண்டிருப்பதாகச் சொல்லும் நாட்டில், இந்தக் குடிசைகளுக்கு இன்னும் மின்சாரம் எட்டிப் பார்க்கவில்லை.

மற்ற ஊர்களைப் போலவே சாதி தீண்டாமையின் அடையாளமாக விளக்கப்பாடியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் தனித் தேநீர் குவளை முறை கடைபிடிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களை நிரந்தரக் கொத்தடிமையாக மாற்றும் ''அடையாள்'' முறையும் இங்கு நிலவுகிறது.

நிலத்துக்கு உரிமையாளர்களான வன்னியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வரை கடன் கொடுப்பார்கள். இந்தக் கடன் தீரும் மட்டும் கடன் பெற்றவர் அந்தப் பண்ணையாரிடம்தான் வேலை செய்ய வேண்டும். வெளியில் தினசரி கூலி ரூபாய் ஐம்பது என்றால், அடையாளாக இருப்பவர்க்கு ரூபாய் இருபத்தைந்து மட்டுமே தரப்படும்.

தாழ்த்தப்பட்ட ஆண்களைக் கொத்தடிமைகளாக்கி, அவர்களிடம் தீண்டாமையைக் கறாராக கடைபிடிக்கும் அதே ஆதிக்கச் சாதி வன்னியர்கள் தாழ்த்தப்பட்ட பெண்களிடம் ''தீண்டாமை'' பார்ப்பதில்லை. விளக்கப்பாடியில் எந்த வன்னிய சாதி வெறியனும் சேரிக்குள் புகுந்து எந்த தாழ்த்தப்பட்ட பெண்ணையும் தூக்கிச் சென்று பலாத்காரம் செய்வது தினசரி சம்பவம்.

பருவமடைந்த பெண்கள், குளத்தில் குளிக்கச் செல்லும் பெண்களைக் கணவன், பெற்றோர்களுக்கு முன்பே தூக்கிச் சென்று பலாத்காரம் செய்வது; திருமணமானவர்களெனில் கணவனுக்கு முன்பே முதலிரவன்று மணப்பெண்ணை பெண்டாள்வது; இதைத் தட்டிக் கேட்பவரைக் கொலை மிரட்டல் விடுத்து உண்மைகளை வெளியில் தெரியாமல் மூடிமறைப்பது என்று வன்னியர்கள் வெறியாட்டம் போட்டு வந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்படுவதோடு, தங்கள் வீடுகளுக்குக் கதவுகள் கூட வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. விளக்கப்பாடிக்கு அருகிலுள்ள ஊ.ஆதனூரில் வன்னிய சாதியினரை எதிர்த்துப் பேசினார் என்பதற்காக ஒரு தாழ்த்தப்பட்டவரின் நாக்கை வெட்டியுள்ளனர். திருடி சாராயம் குடித்ததற்காக இன்னொடு தாழ்த்தபபட்டவரை அடித்துக் கொலை செய்து உடலை மூட்டையாகக் கட்டி வயலில் எறிந்துள்ளனர்.

பத்திரிக்கைகள் மூலம் விளக்கப்பாடியில் நடக்கும் பாலியல் ஒடுக்குமுறைகள் பற்றி வெளியில் தெரியத் தொடங்கியதும் வன்னியர்களுக்கு ஆதரவாக பா.ம.க. வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராசன், ''பத்திரிக்கைகளில் வெளி வந்த செய்திகள் உண்மையானதல்ல. உண்மையில் இங்குள்ள தாழ்த்தப்பட்ட சாதியினரைக் கண்டு தான் மற்ற சாதியினர் பயப்படுகிறார்கள். அவர்கள் சும்மாயிருக்கும் போதே தீண்டாமை ஒழிப்பு பிரிவில் வழக்கு போடுறாங்க'' என்று தாழ்த்தப் பட்டவர்கள் மீதே பழி கூறி, உண்மையை மூடி மறைக்க முயற்சி செய்கிறார்.

அதோடு இச்செய்தியை வெளியிட்ட ''நக்கீரன்'' பத்திரிக்கையைத் தடைசெய்ய வேண்டுமென்றும், இத்தீண்டாமை கொடுமைகளுக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்த இடது, வலது கம்யூனிஸ்டு கட்சிகளைத் தடைசெய்ய வேண்டுமென்றும் கோவிந்தராசன் வன்னிய ஆதிக்கச்சாதியினரைத் திரட்டி எதிர் ஆர்ப்பாட்டம் நடத்தினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ம.க. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர் மன்றத் தலைவர் முதலானோர் கலந்து கொண்டனர்.

விளக்கப்பாடியிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நிலவும் தனித் தேநீர் குவளை முறையை அகற்றவும், பாலியல் ஒடுக்குமுறைகள் குறித்துக் குற்றப் புலனாய்வு செய்து உண்மைகளைக் கண்டறிந்து தொடர்புடையவர்களை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டுமென்றும், சி.பி.எம்., மற்றும் விடுதலை


படிப்பகம்

www.padippakam.com

சிறுத்தைகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஆனால், இங்கு நிலவும் சாதிய அடக்குமுறையின் தன்மையோ வேறானதாக உள்ளது. அதே ஊரில் இருக்கும் வரை வன்னிய சாதியினர் தமக்கிழைக்கும் கொடுமைகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் வெளியில் சொல்லமாட்டார்கள். இதுவரை அவர்கள் குடியிருக்கும் இடங்களே அவர்களுக்குச் சொந்தமில்லாத போது எதிர்த்துப் பேசினாலே கொலை செய்யப்படுவார்கள் என்ற சூழலில், எந்த விசாரணையும் நேர்மையாக நடக்க வாய்ப்புகள் சிறிதுமில்லை.

இவற்றை கணக்கிலெடுத்துக் கொண்ட புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி விளக்கப்பாடி தாழ்த்தப்பட்ட மக்களை வன்னிய சாதி வெறியர்களிடமிருந்து மீட்டு வேறு இடங்களில் குடியமர்த்த வேண்டும்; தீண்டாமை குற்றம் புரியும் வன்னிய சாதி வெறியர்களை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டுமென்று கோரிக்கைகளை முன்வைத்தும், வன்னியர்களின் இந்தச் சாதிவெறி தாக்குதல்கள் பார்ப்பன பயங்கரவாதத்தின் ஒரு முகம்தான் என்று விளக்கியும் மக்களிடம் பிரச்சார இயக்கம் மேற்கொண்டனர்.

மேலும், அகரஆலம்பாடி, பெருவரப்பூர், ஒட்டிமேடு, பெருந்துரை, சின்னக்கோட்டிமுளை, பெரியக்கோட்டிமுளை, சிறுவரப்பூர், ஊ.ஆதனூர், அகரம், சாத்தப்பாடி, தேவங்குடி, புத்தூர் கீழ்ப்பாளையூர், மேலப்பாளையூர் கம்மாப்புரம் ஆகிய கிராமங்களில் நிலவும் இரட்டை குவளைமுறை, மற்றும் சாதி தீண்டாமைக்கு எதிராகப் போராட வேண்டிய அவசியத்தையும் பிரச்சாரத்தின் ஊடாக பு.மா.இ.மு. உணர்த்தியது.

இப்பிரச்சாரத்தின் தொடர்ச்சியாக விருத்தாசலத்தில் 22-01-03 அன்று ஊர்வலமும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டன.

சாதி - தீண்டாமைக் கொடூரத்தின் இன்னொரு பரிமாணத்தை விளக்கப்பாடி கிராமம் காட்டுகிறதென்றால், இன்னும் வெளியில் வராத விளக்கப்பாடிகள் இருக்கவே செய்கின்றன. அவற்றை வெளியில் கொண்டுவரவும், ஒழிக்கவும் சாதி - தீண்டாமைக்கெதிரான, பார்ப்பன பயங்கரவாதத்துக்கெதிரான பிரச்சாரம் மேலும் பரவலாக கொண்டு செல்லப்பட வேண்டும்.

— பு.ஜ. செய்தியாளர்கள், விருத்தாசலம்.

## மெரினாவை அழகுபடுத்தும் திட்டம்

# மீனவர் வாழ்வைப் பறிக்கும் வக்கிரம்

தமிழகத்தின் வளமான விளை நிலங்களைத் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பட்டா போட்டுக் கொடுக்கத் தரிசு நில மேம்பாடு திட்டத்தைக் கொண்டு வந்துள்ள ஜெயா அரசு, சென்னை மெரினா கடற்கரையையும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கத் திட்டம் போட்டுள்ளது.

சென்னை கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள கலங்கரை விளக்கத்தில் இருந்து சீனிவாசபுரம் வரை – ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைந்துள்ள மீனவர் குப்பங்களை அகற்றி விட்டு, அந்த இடத்தில் பன்னாட்டு நிறுவனங்களும், வெளிநாட்டுத் தூதரகங்களும் தங்களின் அலுவலகங்களை அமைத்துக் கொள்ளுவதற்கு வசதியாக 1,000 கோடி ரூபாய் செலவில் புதிய நகர் உருவாகவுள்ளது. இதற்கான ஒப்பந்தம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கும், அந்நிய நாட்டு நிறுவனமான மலேசியா கட்டுமானக் கழகத்திற்கும் இடையே கையெழுத்தாகியிருக்கிறது.

மீனவ நண்பனாக வேடம் போட்ட எம்.ஜி.ஆரின் ஆட்சியில், மெரினாவின் அழகு கெடுவதாகக் கூறி, கடற்கரையில் கட்டுமரங்களை நிறுத்தக் கூடாது என உத்தரவு போடப்பட்டது. அதை எதிர்த்து நடந்த மீனவர்களின் போராட்டத்தில் ஐந்து மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். எம்.ஜி.ஆரின் வாரிசு ஜெயாவோ, அவரை விட ஒரு படி மேலே போய், மெரினா கடற்கரைப் பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்களின் வாழ்க்கையை ஒரேயடியாகப் பறித்துவிடப் பகிரங்கமாகத் திட்டம் போடுகிறார். அதற்கு, ''அழகிய மெரினா'' என அதிகாரத் திமிரோடு பெயரும் சூட்டுகிறார்.

அடுத்த ஆறு ஆண்டுகளில் உருவாகவுள்ள இப்புதிய நகருக்காகப் போடப்பட்ட ஒப்பந்தத்தின் மை உலரும் முன்பே, மீனவர்களை அப்புறப்படுத்தும் அடாவடித்தனத்தைத் தொடங்கிவிட்டது, தமிழக அரசு. கலங்கரை விளக்கத்தை ஒட்டி அமைந்துள்ள நொச்சிக்குப்பம் மீனவர்களை, ஒன்றரை கிலோ மீட்டர் தள்ளியுள்ள சீனிவாசபுரத்திற்குக் குடிபெயர்ந்து போகுமாறு உத்தரவிட்டுள்ளது, அதிகார வர்க்கம். ஆனால், அப்பகுதி மீனவர்களோ, '' எங்களிடம் 600 கட்டுமரப் படகுகள் உள்ளன. அதை அங்கே வைப்பதற்கு இடம் போதாது. அது மட்டுமல்ல, கட்டுமரப் படகுகளை கடலுக்குள் இறக்கும் போது குறிப்பிட்ட பரப்பளவு தேவை. அந்தப் பரப்பளவு சீனிவாசபுத்திலுள்ள கட்டுமர மீனவர்களுக்கு மட்டுமே போதுமானது. எனவே, எங்களை அங்கே குடியமர்த்தினால், அது அவர்களது பிழைப்பில் மண்அள்ளிப் போடுவது போலாகும்'' என இடம் பெயர்வதில் உள்ள சிக்கல்களையும், தொழில் நியாயத்தையும் எடுத்துக் கூறி, இடம் பெயர மறுத்து வருகிறார்கள்.

பன்னாட்டு நிறுவனங்களும், வெளிநாட்டுத் தூதரகங்களும் கடற்கரைக் காற்று வாங்கினால்தான் இயங்க முடியும் என்பதெல்லாம் கிடையாது. தகவல் தொடர்பில் ஏற்பட்டுள்ள புரட்சியின் காரணமாக, அவை நகரத்தின் ஏதோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டுகூடச் செயல்படலாம்.

தொடர்ச்சி 19-ஆம் பக்கம்

பன்னாட்டு நிறுவனங்களுக்காக ஒரு புதிய நகரை உருவாக்கக் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை பரிமாறிக் கொள்ளும் தமிழக முதல்வர் ஜெயா மற்றும் மலேசிய நாட்டு அமைச்சர் டத்தோ சாமிவேலு.




படிப்பகம்

# திரவியம் தேடிப் போனவர்களின் துயரக் கதை

''திரை கடலோடி திரவியம் தேடு'' என்பது பழமை வாய்ந்த தமிழ் பழமொழி. ஆனால், அந்தப் பழமொழிக்கு நேர்மாறாக அமைந்துவிட்டது, மாலத்தீவுகளுக்கு 'திரவியம்' தேடிச் சென்ற அப்பாவி தமிழர்களின் வாழ்க்கை.

நாகை மாவட்டம் மணக்குடியில் இருந்து வேலை தேடி மாலத்தீவுகளுக்குப் போன ரவிக்குமார், தனது வெளிநாட்டு வாழ்க்கை சிறைக்குள் கழியும் என்பதைக் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். ரவிக்குமார், தனது மாலத்தீவு முதலாளியிடம் நான்கு மாத சம்பளப் பாக்கியைக் கேட்டதுதான் குற்றமாகிவிட்டது. வீண் தகராறு செய்ததாகக் கூறி, ரவிக்குமாரை உள்ளே தள்ளிவிட்டது, மாலத்தீவு போலீசு.

இத்துணைக்கும் ரவிக்குமார் திருட்டுத்தனமாகவோ, சட்டவிரோதமாகவோ வேலை தேடி மாலத்தீவுக்குப் போகவில்லை. விசா எடுத்து, மாலத்தீவுகளில் வேலை செய்வதற்காக உரிமம் பெற்று முறையாகத்தான் மாலத்தீவுகளுக்குச் சென்றிருக்கிறார். ஆனால், சம்பளம் கேட்டவுடன், இந்தச் சட்டபூர்வ காகிதங்கள் அனைத்தும் கழிப்பறைக் காகிதமாகிவிட்டன.

திருவாரூர் மாவட்டம் குலமாணிக்கத்தைச் சேர்ந்த சந்திரசேகரின் மாலத்தீவு அனுபவமும், ரவிக்குமாரின் கதையைப் போன்றதுதான். வேலை பார்த்த நாட்களுக்குச் சம்பளம் கேட்டதற்கு, இவருக்குக் கிடைத்ததும் சட்டவிரோத சிறை தண்டனைதான்.

ரவிக்குமார், சந்திரசேகரின் துயரக் கதைகள் ஏதோ விதிவிலக்கானதல்ல. இவர்கள் அடைக்கப்பட்டிருந்த சிறையில் இந்திய நாட்டைச் சேர்ந்த 80 தொழிலாளர்கள் பல ஆண்டுகளாகச் சட்ட விரோதமாகச் சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ரவிக்குமாரும், சந்திரசேகரும் கொஞ்சம் 'அதிருஷ்டப்' பேர்வழிகள் போலும். ''சம்பளம் தர முடியாது. விமான டிக்கெட் எடுத்துத் தருகிறேன். ஊருக்குப் போறியா?'' என இவர்களின் முதலாளி சிறையில் சந்தித்துக் கேட்க, ''பணமும், காசும் தேவையில்லை, உயிரோடு ஊருக்குத் திரும்பினாலே போதும்'' என முடிவெடுத்து, மாலத்தீவில் இருந்து விடுதலையாகி வந்து விட்டனர்.

இவர்கள் ஊருக்குத் திரும்பும் பொழுது, சிறையில் வாடும் தமிழகத் தொழிலாளர்கள் கொடுத்த ஒரு கடிதத்தை, சிறைக் கண்காணிப்பாளர்களின் பார்வையில் படாமல், உள்ளாடைக்குள் மறைத்து வைத்து எடுத்து வந்திருக்கிறார்கள். சிவகங்கை மாவட்டம் கருங்காரம்பட்டியைச்சேர்ந்த தியாகராஜனும், மற்றும் 20 பேரும் சேர்ந்து கையெழுத்துப் போட்டுள்ள அந்தக் கடிதத்தை, இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் மாநிலச் செயலாளர் நல்லக்கண்ணுவிடம் சேர்க்கச் சொல்லிக் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் அந்தக் கடிதத்தை காகிதத்தில் எழுதவில்லை. ரவிக்குமாரின் சட்டையொன்றைக் கிழித்து, அதில் பென்சிலால் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். கடிதம் எழுதுவதற்குத் தேவையான பேனா, காகிதம் போன்ற சாதாரண வசதிகூட அவர்களுக்கு மறுக்கப்படுகிறதென்றால், மாலத்தீவு சிறைக்கூடம், எத்தகையதொரு சித்திரவதைக்கூடமாக இருக்கும்?

''நான்குபுறமும் தகரங்களால் அடைக்கப்பட்டு, உள்ளே காற்று வருவதற்குக் கூட வழியின்றி அவதிப்பட்டுக்கிடக்கிறோம். சூரிய ஒளியையே நாங்கள் பார்க்க முடியாது. எங்கள் ''செல்''லின் இரண்டுபுறமும் 2,500 வாட்ஸ் ஃபோகஸ் லைட்டுகளைப் பொருத்தியுள்ளார்கள். இதனால் எங்களுக்குக் கண்வலியும் தலைவலியும் ஏற்படுகிறது'' என அக்கடிதத்தில் குறிப்பிட்டு உள்ளார்கள்.

மேலும், ''தமிழகத்தைச் சேர்ந்த சத்தியமூர்த்தி என்பவருக்கு டி.பி. வியாதி வந்து, இரண்டு மாதம் கழித்துதான் மருத்துவரிடம் கொண்டு போனார்கள், ஆனால், எந்த நோயும் இல்லையென்று திரும்பவும் அவரைச் சிறைக்கே கொண்டு வந்தார்கள். நான்கே நாட்களில் அவர் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக ஆக, மீண்டும் மருத்துவமனைக்குக் கொண்டு போனார்கள். அதன்பிறகு அவருக்கு என்ன ஆனது என்பது இதுவரை தெரியவில்லை.''

''இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முகமது அலி ஜின்னா, டி.பி. நோயால் பாதிக்கப்பட்டு, முறையான மருத்துவச் சிகிச்சை தரப்படாததால், டிசம்பர் 19-ஆம் தேதி இறந்து விட்டார். கண்ணங்குடி கிராமத்தைச் சேர்ந்த சரவணன் என்பவர் டி.பி. நோயால் பாதிக்கப்பட்டுக் கிடந்தபொழுது, இரண்டு காவல்துறை அதிகாரிகள் அவரை அடித்தே கொன்றார்கள். பின்னர், இதைத் தற்கொலை என்று மூடி மறைத்து விட்டார்கள்'' எனத் தமிழகத் தொழிலாளர்கள் மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டு வருவதை விவரிக்கும் அக்கடிதத்தில், ''நமது தூத



குடியரசுத் தலைவர் வரை மனு செய்த பின்னும், மாலத்தீவுகள் சிறையில் இருந்து மீட்கப்படாமல் தண்டிக்கப்படும் பேராவூரணியைச் சேர்ந்த ரமேஷ்குமார்.

இந்திய அரசு இந்தோனேஷியாவை மிரட்டி, விடுதலை செய்த போலாரிஸ் நிறுவனத் தலைவர் அருண் ஜெயின்.



ரகம் எந்த முயற்சியும் எடுக்காமல் தூங்குவதன் காரணம் என்ன?'' என்ற கேள்வியையும் எழுப்பி இருக்கிறார்கள்.

இந்தக் கேள்வியில் உள்ள நியாயத்தை யாராலும் மறுக்க முடியாது. அதேசமயம், சென்னையில் இயங்கும் போலாரிஸ் நிறுவனத் தலைவர் அருண் ஜெயின் சமீபத்தில் இந்தோனேஷியா நாட்டில் சிறை வைக்கப்பட்ட பொழுது, அவரை மீட்க இந்திய அரசு காட்டிய அக்கறையையும், வேகத்தையும் அத்தொழிலாளர்கள் அறிந்திருந்தால், இந்தக் கேள்வியை வேறுமாதிரி கேட்டிருப்பார்கள்.

அருண் ஜெயின் இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டவுடனேயே, ''எங்கள் நாட்டுத் தொழில் அதிபரை உடனே விடுதலை செய்யாவிட்டால், இந்தியா - இந்தோனேஷியா இடையிலான நட்புணர்வும், வியாபார ஒப்பந்தங்களும் முறிக்கப்படும்'' என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சின்கா எச்சரித்தார். சந்திரபாபு நாயுடு, எஸ்.எம்.கிருஷ்ணா, ஜெயா மூவரும் ஒரே குரலில், ''இது இந்தியாவின் கௌரவப் பிரச்சினை. அருண் ஜெயின் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்'' என வாஜ்பாய்க்கு நெருக்கடி கொடுத்து, அவரை மீட்டார்கள்.

அருண் ஜெயின் என்ற இந்தியக் குடிமகன் இந்தோனேஷியா நாட்டில் ஓரிரு நாட்கள் சிறையில் இருந்ததையே கௌரவப் பிரச்சினையாகப் பார்ப்பவர்கள், மாலத்தீவில் 80 இந்தியக் குடிமகன்கள் பல ஆண்டுகளாகச் சிறையில் வாடுவதை, சித்திரவதை செய்யப்படுவதை, கொல்லப்படுவதை வேடிக்கை பார்ப்பது ஏன்? இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் கொல்லப்படும் பொழுதெல்லாம், இந்திய ஆட்சியாளர்கள் மௌனச் சாமியார்களாக இருப்பது ஏன்?

அருண் ஜெயின் தொழில் அதிபர்; புதுப் பணக்காரர். தியாகராஜனும், முகமது அலி ஜின்னாவும் ஏழைகள்; கூலித் தொழிலாளர்கள். இந்த வர்க்க வேறுபாட்டைத் தவிர, இந்தக் கேள்விகளுக்கு வேறு பதில் இருக்க முடியாது! குடிமக்களை இப்படி வேறுபடுத்தி, பணக்காரர்களுக்குச் சாதகமாக, அனுசரணையாக நடந்து கொள்ளும் இந்திய அரசை, ''குடியரசு'' என்றும் அழைக்கவும் முடியாது!

● சுப்பு

---

17-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், மீனவர்களோ கடற்கரை ஓரங்களில் தான் வாழ முடியும். மீன்பிடி வலைகளை உலர்த்தவும், கட்டுமரங்களை நிறுத்தவும் நீண்ட, பரந்த கடற்கரை அவர்களுக்குத் தேவை. மேலும், மீனவர்கள், மீன்கள் அதிகமாகக் கிடைக்க வாய்ப்புள்ள கடல் நீரோட்டத்துக்கு ஏற்பவே தங்களின் குப்பங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இதனால், அவர்களை நாத்தைப் பிடுங்கி நடுவது போல, வேறொரு பகுதியில் ஆட்சியாளர்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்பக் குடியமர்த்த முடியாது.

சென்னை கலங்கரை விளக்கத்தில் இருந்து சீனிவாசபுரம் வரை உள்ள பகுதியில் கிட்டதட்ட 10,000 மீனவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுள் 1,500 குடும்பங்களைத் தான் ஒன்றரை கி.மீ. தூரத்தில் உள்ள சீனிவாசபுரத்தில் குடியமர்த்தத் திட்டம் தீட்டியுள்ளது, தமிழக அரசு. மீதியுள்ள குடும்பங்கள் கடற்கரையோடு தொடர்பு இல்லாத புறநகர்ப் பகுதிகளுக்குத் துரத்தியடிக்கப்படலாம்.

மேலும், இப்பகுதியில் மீனவர்களோடு, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவருமே காலைக்கடனை முடிப்பதற்குக் கூட, கடற்கரையைப் பயன்படுத்த வேண்டிய அவலமான நிலையில் உள்ளனர். இப்பகுதியில் பொதுக் கழிப்பிடம் உள்ளிட்ட அடிப்படை சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தாலே, மெரினா கடற்கரை மேலும் அழகாகத் திகழும். இதற்கு 1000 கோடி ரூபாய் தேவையில்லை. சில இலட்சங்களே போதும். மக்களுக்குச் செய்ய வேண்டுமென்றால் கஜானா காலி எனக் கையை விரிக்கும் ஜெயா, பன்னாட்டு நிறுவனங்களின் வசதிக்காக தமிழக கஜானாவையே திறந்து வைக்கிறார்.

தாராளமயத்தின் பின், மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களை இந்தியக் கடற்பகுதியில் மீன் பிடிக்க அனுமதித்தால், பாரம்பரிய மீனவர்கள் கடலில் இருந்து துரத்தப்படுகின்றனர். ஜெயா கொண்டு வரத் துடிக்கும் அழகிய மெரினா திட்டமோ, இன்னும் ஒருபடி மேலே போய், அவர்கள் பல்லாண்டுகளாக உரிமையோடு பயன்படுத்தி வந்த கடற்கரைகளில் கால்வைப்பதைக் கூடத் தடுத்து விடும்.



**மெரினாவின் ஒரு பகுதியில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவது, ஒட்டகம் கூடாரத்தினுள் மூக்கை நுழைத்த கதை போலாகும்.**

உலகில் உள்ள மிகவும் நீளமான, பரந்த கடற்கரைகளுள், இரண்டாவது இடத்தில் சென்னை மெரினா இருப்பதால், அதன் மீது பன்னாட்டு சுற்றுலா நிறுவனங்களுக்கு ஒரு கண் உண்டு. மெரினாவின் ஒரு பகுதியில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவது, ஒட்டகம் கூடாரத்தினுள் மூக்கை நுழைத்த கதையைப் போல முடியும். இன்று மெரினாவில் இருந்து மீனவர்களைத் துரத்துபவர்கள், நாளை பொதுமக்கள் மெரினாவில் நுழைவதற்கும் தடை போடுவார்கள். நிலத்தடி நீரை உறிஞ்சி காசுக்கு விற்பதைப் போல, தனியார் ரோடு போல, கடற்கரையும் தனியார்மயமாகும்.

தனியார்மயம் என்றாலே அதன் சூத்திரதாரி உலக வங்கிதான். தனியார்மயம் என்றாலே பொதுச் சொத்துக்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்ப்பதுதான். ரேசன் அரிசி விலையேற்றம், இலவச மின்சாரம் ரத்து, பேருந்து தனியார்மயம், அரசு கல்லூரிகள் பல்கலைக் கழகத்துடன் இணைப்பு என உலக வங்கியும் – ஜெயாவும் கூட்டணி சேர்ந்து கொண்டு தமிழக மக்களின் மீது தொடுத்துவரும் தாக்குதல்களில் ஒன்றுதான் அழகிய மெரினா திட்டம். எனவே, ''அழகிய மெரினா''வை எதிர்க்கும் மீனவர்களின் போராட்டம், தனியார்மயம் – தாராளமயத்தை எதிர்த்து நடைபெற்றுவரும் போராட்டங்களோடு ஐக்கியப்பட வேண்டும்!

● ரஹீம்

www.padippakam.com

# அடி முதல் நுனி வரை அழுகி நாறுது நீதித்துறை

இந்த நாட்டு அரசியல் அமைப்பு மீது இந்திய மக்கள் முற்றாக நம்பிக்கை இழந்துவிடக் கூடாது என்பதற்காக ஜனநாயகவாதிகள் சுட்டிக்காட்டும் ஒரே ஆதாரம் நீதித்துறைதான். ஆனால் இப்போது, இலஞ்ச ஊழலும் அதிகார முறைகேடுகளும் நீதித்துறையின் உயர் மட்டத்தையும் விட்டுவைக்கவில்லை; சில மூத்த நீதிபதிகளின் சீரழிவும் குற்ற நடவடிக்கைகளும் நீதித்துறையின் மீதுள்ள நம்பிக்கையைத் தகர்க்கின்றன; இதைச் சீர் செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கமும், சட்ட – நீதித்துறையும் உடனடியாக எடுக்கவேண்டும் என்று ஜனநாயகவாதிகள் வலியுறுத்துகின்றனர்.

நீதித்துறை அழுகி முடைநாற்றம் வீசுவதைத் தடுப்பதற்காக ஒரு நீதியியல் ஆணையம் அமைத்தே தீர வேண்டும் என்று சட்ட – நீதித்துறை சார்ந்தவர்கள் பரிந்துரைக்கிறார்கள். நீதித்துறையின் சீரழிவு இதுவரை கீழ்நிலை நீதிமன்றங்களோடுதாம் பரவலாக இருந்தது; இப்போது உயர் நீதிமன்றங்களிலும் நெறிபிறழ்வு விரிவடைந்திருக்கிறது; தேசிய நீதியியல் ஆணையம் அமைக்கப் போகிறோம் என்கிறார் மத்திய சட்ட – நீதித்துறை மந்திரி.

மொத்தத்தில் நீதித்துறை தரந் தாழ்ந்து விட்டது; சீரழிகிறது. இதுவரை கண்காணிப்பு, கட்டுப்பாடு இல்லாது தறிகெட்டுப் போன நீதித்துறையை நெறிப்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுத்து அமலாக்க வேண்டும் என்கிற கூச்சல் வலுத்து வருகிறது. இந்த முடிவுக்கு வருவதை அவசியமாக்கிவிட்டதாக மூன்று விவகாரங்கள் கூறப்படுகின்றன.

✱ பஞ்சாபின் அரசு ஊழியர் தெரிவு ஆணையத் தலைவர் ஆர்.டி. சித்து பல நூறு கோடி ரூபாய் அளவு இலஞ்ச ஊழல் செய்து கத்தை கத்தையாகப் பணத்தை வீட்டிலேயே குவித்து வைத்திருந்து, அவை கைப்பற்றப்பட்டுக் கைதாகியுள்ளார். அவரோடு உறவு வைத்துக் கொண்டு ஆதாயம் அடைந்துள்ளனர், பஞ்சாப் – அரியானா உயர்நீதி மன்றத்தின் மூன்று நீதிபதிகள்.

✱ இராசஸ்தான் உயர் நீதிமன்ற நீதிபதியும், நீதிமன்றத் துணைப் பதிவாளரும் தம்முடன் பாலுறவு வைத்துக் கொள்ளும்படி ஒரு பெண் மருத்துவரை நிர்பந்தித்துள்ளனர். இல்லையானால், தம்முன்னுள்ள ஒரு கருக்கலைப்பு வழக்கில் அந்த மருத்துவரைத் தண்டிப்போம் என்று மிரட்டியுள்ளனர்.

✱ மைசூர் நகரில் உள்ள ஒரு உல்லாச விடுதியில் நடந்த விருந்தில் கலந்துகொண்ட கருநாடகாவின் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மூவரும் இரண்டு பெண் வழக்கறிஞர்களும் குடிபோதையில் அங்கிருந்த பெண் விருந்தினரிடம் தகாத பாலியல் சேட்டையில் ஈடுபட்டனர். தகராறு முற்றியபோது அங்கு வந்த போலீசார், கண்டு கொள்ளாமல் ஒதுங்கிவிட்டனர்.

✱ தமிழ்நாட்டின் தொழிலதிபர் ஒருவர் கன்னியாகுமரி நட்சத்திர விடுதியில் ஏற்பாடு செய்த உல்லாச விருந்தில் உயர் போலீசு அதிகாரியுடன் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியும் கலந்து கொண்டிருக்கிறார். விபச்சாரிகளும் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நள்ளிரவில் விருந்தாளிகள் குடி போதை – கும்மாளம் தலைக்கேறி வெறிக்கூச்சல் போட்டிருக்கின்றனர். புகாரின் பேரில் அங்கு சென்ற போலீசு அதிகாரியையும் காவலரையும் அடித்து நொறுக்கி மாடியிலிருந்து கீழே வீசிக் கொல்லவும் விருந்தாளிகள் எத்தணித்தனர். ஓரளவு நிதானத்தில் இருந்த சிலர் தலையிட்டுத் தடுத்திருக்கின்றனர்.

— இவை கடந்த ஒரு சில மாதங்களில் வெளிவந்த தகவல்கள். இப்படிப் புகார்கள் வந்ததும், நடவடிக்கை எடுக்க வேண்டிய உயர் நீதிமன்ற, உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதிகள் குற்றங்கள் புரிந்த தமது சகபாடிகளைத் தண்டிக்கவில்லை. எல்லாவற்றையும் மூடிமறைக்கவும், அவர்களைத் தப்பவைக்கவும் முயன்றுள்ளனர்.

பஞ்சாப் – அரியானா உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிரான புகார்களை முன்னாள் தலைமை நீதிபதி ஒருவர் விசாரித்து அறிக்கை கொடுத்து மூன்று மாதங்களாகியும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கிருபால் தாம் ஓய்வு பெறும் வரை ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிறகு வந்த தலைமை நீதிபதி பட்நாயக் மீண்டும் ஒரு விசாரணைக் கமிட்டி அமைத்து அறிக்கை பெற்றும், குற்றஞ்சாட்டப்பட்ட மூவர் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை; மாறாக, கட்டாய விடுமுறையில் அனுப்பி வைத்தார். மூவரில் இருவர் தாமே ஓய்வு பெற்றனர்; ஒருவர் ஓய்வு பெறும் வரை பணிஒதுக்கீடு தராமல் ஒதுக்கி வைத்திருப்பதோடு சரி.

மைசூரில், பாலியல் குற்ற நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் கமுக்கமாக இடமாற்றம் செய்யப்பட்டனர். அவர்கள் இடமாறிப் போக இருந்த பாட்னா, கௌகாத்தி, சிறீநகர் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்திய பிறகு இடமாற்றம் நிறுத்தி வைக்கப்பட்டது. கருநாடகா வழக்கறிஞர்கள் போராட்டத்தில் குதித்த பிறகு நிர்பந்தம் காரணமாக உச்ச நீதிமன்றம் கருநா

**குடிபோதையில் பாலியல் சேட்டைகள் செய்ததாக நம்பப்படும் கருநாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகள் (இடமிருந்து) என்.எஸ். வீரபத்ரையா, வீ. கோபால கவுடா மற்றும் சந்திரசேகரய்யா.**





படிப்பகம்

டகா நீதிபதிகளின் பாலியல் குற்றம் குறித்து விசாரிக்கும்படி உத்திரவிட்டது. அந்த விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையே, மைசூர் உல்லாச விடுதியில் நடந்த நீதிபதிகளின் பாலியல் அக்கிரமங்களை அம்பலப்படுத்தியதற்காக 14 பத்திரிகைகளின் 56 பத்திரிகையாளர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் போட்டு கருநாடக உயர் நீதிமன்றம் துன்புறுத்துகிறது.



பஞ்சாப் அரசு ஊழியர் தேர்வில் நடந்த முறைகேடுகளில் ஆதாயமடைந்த பஞ்சாப் - அரியானா உயர் நீதிமன்ற நீதிபதிகள் (இடமிருந்து) எம்.எல்.சிங், மெஹ்தாப் சிங் கில் மற்றும் அமர்பிர் சிங்.

இராசஸ்தான் நீதிபதியின் பாலியல் முறைகேடு விவகாரத்தில் முதல்நோக்கு ஆதாரம் இருப்பதாக உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஒப்புக் கொண்டாலும், அவர் மீது இதுவரை நடவடிக்கை ஏதுமில்லை. அவர் பணிக்கு வருவதைத் தானே நிறுத்திக் கொண்டார்; அவ்வளவுதான். கன்னியாகுமாரி உல்லாச விடுதி விவகாரம் பற்றி பல பத்திரிகைகள் எழுதியும் அரசோ, நீதிமன்றமோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இரண்டுமே இந்த விவகாரத்தை வழக்கம் போல கண்டுகொள்ளாமல் கைகழுவி விட்டன.

இப்போது அம்பலமாகி இருக்கும் இந்த நான்கு விவகாரங்களும் மராட்டிய பார் கவுன்சிலின் முன்னாள் தலைவரின் வார்த்தைகளில் சொல்வதானால், ''பனிமலையின் ஒரு முனை மட்டும்தான் வெளியே தெரிய வந்திருக்கிறது.'' நாட்டிலுள்ள 22 உயர் நீதிமன்றங்களின் 641 நீதிபதிகளில் 12 பேர் மீதுதான் இப்படித் தெரியவந்துள்ளது. இதன் பொருள் மற்ற அனைத்து நீதிபதிகளும் சுத்தம் சுயம்பிரகாசங்கள் என்பதல்ல. இந்த உண்மையை நாட்டின் சட்ட – நீதித் துறை சார்ந்த அனைவரும் அறிந்துள்ளனர்.

ஓராண்டுக்கு முன்புதான் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி பருச்சா சொன்னார், ''உயர்நிலை நீதித் துறையில் 20 சதவீத நீதிபதிகளின் நேர்மை மட்டும்தான் மிகவும் சந்தேகமானதாக உள்ளது.'' இப்படி அவர் சொன்னது ஒரு லேசான குத்தல் தானே தவிர, மீதி 80 சதவீதமானவர்கள் நேர்மையானவர்கள் என்று குறிப்பதற்கு அல்ல. இப்படித்தான் ஒரு பத்திரிக்கை எழுதுகிறது.

அந்த அளவுக்கு உயர்நிலை நீதிபதிகளில் பலர் மீதும் சீரழிவு, குற்ற நடவடிக்கைகளின் கறைபடிந்து போயிருக்கிறது. எனவேதான், குறிப்பாக உயர்நிலை நீதிபதிகளின் ஒழுக்கம் – நேர்மை சீரழிவதில் இருந்து தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து சட்ட – நீதித்துறை சார்ந்தவர்களால் பரவலாக விவாதிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள மாவட்ட நீதிபதிகள் முதல் முன்சீப்புகள் வரை 12,000 கீழ்நிலை – விசாரணை நீதிமன்ற நீதிபதிகள் சீரழிவு மற்றும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களை நேரடியாகப் பதவி நீக்கம் செய்யவும், விசாரித்துத் தண்டிக்கவும் அரசுக்கும் நீதித்துறைக்கும் அதிகாரம் உள்ளது. ஆனால், உயர்நீதி மன்றங்கள், உச்சநீதி மன்ற உயர்நிலை நீதிபதிகளாக உள்ளவர்கள் சீரழிவு மற்றும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களைப் பதவி நீக்கம் செய்யவோ, விசாரித்துத் தண்டிக்கவோ ஏறக்குறைய வாய்ப்பும் இல்லை, வழிவகையும் இல்லை என்றும் சொல்லலாம். அப்படிப் புகாருக்குள்ளான எவர்மீதும் இதுவரை எவ்வித நடவடிக்கை எடுத்ததாகவும் எடுத்துக் காட்டு கிடையாது.

ஓர் உயர் நீதிமன்ற நீதிபதி மீதோ, உச்ச நீதிமன்ற நீதிபதி மீதோ ஒரு கிரிமினல் குற்றம் பதிவு செய்வதற்கு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் முன் அனுமதி பெறவேண்டும். அவர் மீது விசாரணை நடத்துவதற்கு அரசுத் தலைவரும் அனுமதி வழங்க வேண்டும். அதன் பிறகு மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு விசாரணை நடத்தும். குறிப்பிட்ட நீதிபதி குற்றம் புரிந்துள்ளதாக விசாரணைக் குழு அறிக்கை சமர்ப்பித்தாலும் அரசுத் தலைவரோ உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியோ எவரும் நடவடிக்கை எடுக்க முடியாது. நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டுபங்கு வாக்களித்து, பதவி நீக்கத் தீர்மானத்தை நிறைவேற்றினால்தான் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன் பிறகு ஏதாவது ஒரு நீதிமன்றத்தில் முறைப்படி வழக்கு நடத்தி அவர் தண்டிக்கப்படலாம்.

ஆனால், குற்றஞ் சாட்டப்பட்ட உயர் நிலை நீதிபதிகளின் எந்தவொரு விவகாரத்திலும் இப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவே இல்லை. ஓய்வு பெற்ற பிறகு ஜெயலலிதா கட்சியில் சேர்ந்து, எம்.பி. பதவிக்குப் போட்டியிட்டுத் தோற்ற முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி(!) ராமசாமி மீது நாடாளுமன்றத்தில் பதவிநீக்கம் தீர்மானம் வரை போனது. அங்கும், ஜெயலலிதா - காங்கிரசு மேற்கொண்ட கூட்டு பேரத்தின் விளைவாக மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு பெறமுடியாமல் தீர்மானம் தோற்றுப் போனது. அந்த ஊழல் பெருச்சாளி இன்னமும் ஆளுங் கட்சிப் பிரமுகராக வெட்கமின்றி அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்.

குற்றஞ்சாட்டப்படும் உயர்நிலை நீதிபதிகளைத் தண்டிக்க முடியாதநிலை என்றால், நேரடியாகத் தண்டிக்கும் வாய்ப்புள்ள கீழ்நிலை நீதிபதிகளோ மத்திய சட்டஅமைச்சரே ஒப்புக் கொள்ளும் வகையில் நெறிதவறி நடப்பது வழக்கமாகிவிட்டது. கீழ்நிலை நீதிபதிகள் போலீசுத் துறையின் கூடுதல் உறுப்பாகவும் தொழில்முறைக் குற்றவாளிகளின் பங்காளிகளாகவும் உள்ளனர்.

குற்றச்சாட்டுக்குள்ளாகும் உயர் நிலை நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பல தடைகள் உள்ள அதே சமயம், அனைத்து மட்ட நீதிபதிகளும் நீதிமன்ற அவமதிப்பு என்கிற ஆயுதத்தைக் கொண்டு யாரை வேண்டுமானாலும் பழிவாங்கலாம். கருநாடக நீதிபதிகளின் மைசூர் பாலியல் குற்ற நடவடிக்கைகளைப் பற்றி எழுதிய 14 பத்திரிக்கைகளுக்கு எதிரான ''நீதிமன்ற அவமதிப்பு'' வழக்கே இதற்குச் சான்றாக உள்ளது.

ஆனால், இதுவரை கூறப்பட்ட விவகாரங்களை விட மிகமிக அதிக அளவில் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் உயர்நிலை நீதிபதிகள் வேறு பல விவகாரங்களிலும் நடந்து கொண்டு வருகின்றனர். சில வழக்குகளைக் காலவரையின்றிக் கிடப்பில் போடுவதன் மூலம் சமூக – அரசியல் கேடுகளை ஏற்படுத்துகின்றனர். சில வழக்குகளில் நன்கு தெரிந்தும் கூட அரசியல் குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுவித்துவிடுகின்றனர். இன்னும் சில வழக்குகளில் விளக்கெண்ணெய்த் தீர்ப்புகளை வழங்

www.padippakam.com

குகின்றனர். மேலும் சில வழக்குகளில் தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் வகையில் ஒதுங்கிக் கொள்ளுகின்றனர். இவற்றோடு சில வழக்குகளில் சட்ட – இயற்கை நீதியைக் கைவிட்டு, சொந்த அரசியல் - சமூகக் கண்ணோட்டத்துடன் ஒரு தலைபபட்சமாக நடந்து கொள்கின்றனர். பின்னும் சில வழக்குகளில் வெறுமனே சட்ட நுட்ப சரத்துக்களை முன்வைத்து, சாரத்தைக் கைவிட்டு ஒரு தரப்புக்குச் சாதகமாகவும் மறுதரப்புக்குப் பாதகமாகவும தீர்பபுகள் வழங்குகின்றனர்.

இவற்றோடு நின்றுவிடுகிறார்களா? இல்லை தாம் சார்ந்துள்ள அரசியல் கருத்துக்கேற்பவோ அரசியல் போக்கிற்கு ஏற்பவோ ஒரு தலைப்பட்சமாகத் தீர்ப்புகள் கூறுகின்றனர். அப்புறம் சில வழக்குகளின்போது தேவையில்லாத உபதேசங்கள் செய்கின்றனர். மேலும் சில வழக்குகளின் வாதப் பிரதிவாதங்களின் போது கேலியும் கிண்டலும் குத்தலுமாக ''கமெண்ட்'' அடிக்கின்றனர். அரசுக்கும் – முதலாளிகளுக்கும், ஏழை – எளிய உழைக்கும் மக்களுக்கும் இடையிலான வழக்குகளில் முன்னவர்களுக்குச் சாதகமான தீர்ப்புகளையே வழங்குகின்றனர். அரசுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான வழக்குகளில் முதலாளிகளுக்குச் சாதகமாகவே தீர்ப்புக் கூறுகின்றனர். முதலாளிகள் – தொழில் நிறுவனங்களுக்கு இடையிலான வழக்குகளில் தங்களுடைய சொந்த ஆதாயங்களுக்கு ஏற்ப முடிவு செய்கின்றனர். தேசிய நலன்கள் என்கிற பெயரில் ஜனநாயக விரோதத் தீர்ப்புகளும், ஏகாதிபத்தியங்கள் - பன்னாட்டுத் தொழில் கழகங்களுக்கு எதிரான வழக்குகளில் தேசத் துரோகத் தீர்ப்புகளும் வழங்குகின்றனர்.

மேற்கண்ட கருத்துக்கள் சான்றுகளற்ற விமர்சனங்கள் அல்ல.

● அயோத்தி பாபர் மசூதிக்குள்ளே புகுந்து இராமன் சிலையை வைத்த வழக்கு 55 ஆண்டுகளாக நடக்கிறது. மசூதியை இடித்த வழக்கு அத்வானி உட்பட மத்திய மந்திரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டு உள்ளது. இந்த வழக்குகள் அனைத்திலும் இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்கு ஆதரவாகவும், அவர்களின் குற்ற நடவடிக்கைகளுக்கு உடந்தையாகவும்தான் நீதிபதிகள் செயல்பட்டு வருகின்றனர். இந்துத்துவா, தேசியம், ராமன் பற்றிய இந்து மதவெறியர்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கருத்துக்கள் கூறியுள்ளனர். அதுவும் தேவையின்றி தாமே முன்வந்து இவ்வாறு நடந்துள்ளனர்.




**போபால் விஷவாயுப் படுகொலை வழக்கில் பதினெட்டு ஆண்டு காலமாக மறுக்கப்படும் நீதி.**

● போபால் விஷவாயு படுகொலை வழக்கு,போபார்ஸ் ஊழல், சீக்கியர் படுகொலை வழக்குகள் போன்றவை சுமார் 20 ஆண்டுகளாகியும் தீர்ப்புக் கூறாமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்து மதவெறியர்கள் நடத்திய நூற்றுக்கணக்கான கலவரம் – படுகொலை வழக்குகள் பல ஆண்டுகளாகியும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. அதேபோல, ஜெயலலிதா மீது தொடுக்கப்பட்ட லஞ்ச – ஊழல் வழக்குகளை அவர் ஆட்சிக்கு வந்ததும் முடக்கிவைத்திருக்கிறது. போபர்ஸ் முதல் ஜெயலலிதா வரை ஊழல் வழக்குகளில் சட்டத்துக்குப் புறம்பாக முதல் தகவல் அறிக்கையையே உயர் நீதிமன்ற நீதிபதிகள் இரத்து செய்தனர்.

● மராட்டியத்தில் மதுரா என்ற ஆதிவாசிச் சிறுமி, ராஜஸ்தானில் பன்வாரி தேவி மற்றும் கருநாடகா, பீகார் என்று வெவ்வேறு மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட பெண்கள் மேல்சாதி வெறியர்களால் கற்பழிக்கப்பட்ட விவகாரங்களில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டதோடு, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவு செய்யும் வகையில் நீதிபதிகள் கருத்துக் கூறியுள்ளனர். கீழ்வெண்மணி போன்று தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை வழக்குகளிலும் மேல்சாதி வெறியர்களுக்குச் சாதகமாகவே தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

● போலீசாரின் கொட்டடிக் கொலைகள், போலீசு நிலையக் கற்பழிப்பு வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது அரிதிலும் அரிதே. ஏறக்குறைய தண்டிக்கப்படுவதே இல்லை. போலீசு, இராணுவம், துணை இராணுவத்தின் கும்பல் வெறிச் செயல்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை. இவற்றை விசாரிக்கும் ஆணையங்களின் நீதிபதிகள் அரசு விருப்பங்களையே முடிவுகளாக அறிவிக்கின்றனர். இதற்காகவே நீதிபதிகள் மோகன், பக்தவச்சலம் போன்றவர்கள் ஓய்வுபெற்ற பின்னரும் அரசவை ஆணையர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

● குடிசைகளை அகற்றுவது, கேடு விளைவிக்கும் ஆலைகளை அனுமதிப்பது, தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வது, பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிப்பது, தனியார்மயம், தாராளமயத்துக்கு ஆதரவாகத் தீர்ப்புகள் கூறுவது போன்ற வழக்குகளில் அரசு மற்றும் தரகு அதிகார முதலாளிகளுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறியுள்ளனர். பிரதான சாலைகளில் பேரணி நடத்தத் தடை, கடையடைப்பு, வேலை நிறுத்தங்களுக்குத் தடை, தாய்மொழி வழிக் கல்விக்கு எதிர்ப்பு, இட ஒதுக்கீடுகளுக்கு எதிர்ப்பு - இப்படி பல வகை


படிப்பகம்

www.padippakam.com

யிலும் மக்கள் விரோத - ஜனநாயக விரோதத் தீர்ப்புகள் வழங்கியுள்ளனர்.

நாடாளுமன்றம் தாக்கப்பட்ட வழக்கு, ராஜீவ் காந்தி கொலை, போலீ சுக்காரர் செல்வராஜ் கொலை வழக்குகள் போன்றவற்றில் தங்கள் முன் வைக்கப் பட்ட ஆதாரங்களை வைத்து முடிவு செய்வதற்கு பதில், பலியானவர்களின் முக்கியத்துவம், தாக்கியவர்கள் பயங்க ரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்ட வர்கள் என்பதற்காக வேண்டாத "கமெண்ட்டுகளை" முன்வைத்து அந்த தண்டனைகள் வழங்கப்பட்டன. ஆனால், கீழ்வெண்மணி முதல் மேல வளவு வரை தாழ்த்தப்பட்ட மக்கள் படு கொலைக்குக் காரணமானவர்கள் கரு ணையோடு அணுகப்பட்டு, விடுதலை யாயினர் அல்லது குறைந்தபட்ச தண்ட னையே வழங்கப்பட்டது.

● உச்ச நீதிமன்றமே பொறுப்பற்ற, ஒருதலைபட்சமான அணுகுமுறையை மேற்கொள்வதற்கு காவிரிப் பிரச்சினை மீதான வழக்கு சான்றாக உள்ளது. உச்ச நீதிமன்றம், காவிரி ஆணையம் ஆகிய வற்றின் முடிவுகளை அமலாக்க மறுத்த கருநாடக அரசுக்கு எதிரான இரண்டு நீதி மன்ற அவமதிப்பு வழக்குகள் போட்டும் கூட, விசாரணை - தீர்ப்பு வழங்காமல் மாதக்கணக்கில் இழுத்தடித்து, தமிழகத் துக்கு எதிராகச் செயல்படுகிறது உச்சநீதி மன்றம். குற்றச்சாட்டுக்குள்ளான கருநா டகா மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் குற்றஞ்சாட்டிய தமிழக முதல்வ ருக்கு எதிராக நிபந்தனைகள் விதித்து, உருட்டி மிரட்டியிருக்கிறது. பிரதமருக்கு முதல்வர் எழுதிய கடிதத்தை தானே விவகாரமாக்கியது. கருநாடக அரசுக்குச் சாதகமாகச் செயல்படும் காவிரி ஆணை யத்திடம் பொறுப்பைத் தள்ளிவிடுகிறது. உசச நீதிமன்றமும் காவிரி ஆணையமும் மாறிமாறி இழுத்தடித்து, தமிழகத்தில் கடும் பஞ்சம் வரவும், பட்டினிச் சாவுக்கும் தாமும் காரணமாகிவிட்டனர்.

உச்ச நீதிமன்றமே இவ்வளவு கேவ லமாக நடந்துகொள்ளும் போது, இனி மேலும் சட்ட - நீதித்துறையின் மீது நம்பிக்கை வைக்க முடியுமா? தேர்தல் அரசியல்வாதிகள் முற்றாக அம்பலப் பட்டுப்போன பிறகு தேர்தல் சீர்திருத் தத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். அதே போல, சட்ட – நீதித்துறை மீது முற்றாக மகள் நம்பிக்கை இழந்து விட்ட பிறகு சட்ட – நீதித்துறை சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். இதுவும் அழுகி முடைநாற்றம் வீசும் புண்ணுக்குப் புனுகு தடவும் முயற்சிதான்!

● ஆர்.கே.

# எங்கே மனித உரிமை?



சென்னை நகரைச் சேர்ந்த சுப்பிரமணி, முப்பத் தியேழு வயதான சமையல் தொழி லாளி. திருமணமா காதவர். இ.பொ.க. (மா-லெ) (செங்கொடி) யின் முன்னாள் ஆதர வாளர். தமிழ் பற்றாளர். தமிழ் அமைப்புகள் நடத்தும் கூட்டங் களில் அவற்றின் பிரசுரங்கள், புத்த கங்கள் விநியோகிப் பதிலும் விற்பதிலும் ஆர்வம் உள்ளவர்.

சமீபத்தில் தர்ம புரி மாவட்டம் ஊத்தங்கரையில் மக்கள் யுத்தக் குழு தோழர்கள் வேட்டையாடப்பட் டது வாசகர்கள் அறிந்ததே. ஊத்தங் கரையை காரணம் காட்டி , போலீசின் கொடுங்கரம் தமிழ் நாடு முழுவதும் நீண்டது. ஊத்தங்கரை தோழர்களுடன் தொடர்புடையவர் என்று போலீசாரால் குறிவைத்து தேடப்பட்டவர், சென்னை கே.கே.நகரைச் சேர்ந்தவர் அறிவொளி. இவருடன் சுப்பிரமணியன் தொடர்பு வைத்திருந்தார் என்று சொல்லி இவர் மீதும் போலீசு பாய்ந்தது.

29.11.02 அன்று இரவு இவரது வீட்டில் புகுந்தது கே.கே.நகர் போலீசு. சுப்பிரமணியத்தின் கைகளை முறுக்கி ஜீப்பில் தள்ளியது. அவரது மீசை முடியைப் பிடுங்கி, "என்னடா பெரிய மீசை? மனசுல என்ன பிரபாகரன்னு நெனப்பா?" என்று போலீசார் கேலி செய்தனர்.

ஸ்டேசனில் 7 பேர் அடங்கிய போலீசு கும்பல், இதேபோல் விசா ரணை என்ற பெயரில் அழைத்து வந்த நடராசன், இரகுபதி, காலன் துரை, அழகு ஆகியோரையும் முரட்டுத்தன மாக நடத்தியது. சுப்பிரமணியனை மட்டும் குறிப்பாக அறிவொளி பற்றி விவரங்களை கேட்டு மிருகத்தனமாக அடித்தது.

போலீசு நிலையத் தூணில் நிற்க வைத்து சுப்பிரமணியனின் கை கால்களைப் பின்புறமாக இழுத்து முறுக்கியது. இதனால் தூணோடு விரைத்து நின்ற அவ ரது உடலை லத்தியால் சரமாரி யாகத் தாக்கியது. "உனக்கும் அறி வொளிக்கும் என்ன தொடர்பு? இப்ப அறிவொளி எங்க இருக்கான்னு சொல்லு" என்றது. சுப்பிரமணியன் "நான் கூட்டங்களில் புத்தகங்கள் விற்பதால் பலபேர் என்னிடம் பேசுவர். அப்படித்தான் அறி வொளியையும் எனக்குத் தெரியும். அதற்கு மேல் அவரைப் பற்றி எனக்கு தெரியாது" என்றார். வெறி யேறிய போலீசு அவரை தொடர்ச்சி யாகத் தாக்கி தொடை எலும்பை முறித்தது. இந்த நிலையிலேயே தொடர்ந்து மூன்று நாட்கள் அவரைச் சித்திரவதை செய்தது.

பின்னர் போலீசார், "காவலர்கள் துரத்திக் கொண்டு செல்லும் போது தடுக்கி விழுந்துவிட்டதாக"க் கூறி கே.கே.நகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். சுப்பிரமணி யனைப் பரிசோதித்த மருத்துவர்கள், "தொடை எலும்பு உடைந்துவிட்டது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்" என்றனர். இவ்விசயம் வெளியில் தெரி வதை தடுக்க, சுப்பிரமணியத்தின் பெற்றோர், உறவினர்களையும் மிரட்டத் துவங்கியது, போலீசு. "காவல்துறை யினர் அடித்ததால்தான் கால் உடைந்தது என்று வெளியில் சொன்னால், உங்கள் மீதும் தீவிரவாதிகள் என்று வழக்கு போட்டு உள்ளே தள்ளிவிடுவோம்" என்று மிரட்டி சுப்பிரமணியன் கீழே விழுந்ததால்தான் கை, கால் உடைந்தது என்று எழுதி வாங்கிக் கொண்டனர்.

சுப்பிரமணியனை அப்படியே ஒடிந்த காலுடன் வீட்டுக்கு அனுப்ப எத்தணித்தது, போலீசு. இதனால் கொதிப்படைந்த உறவினர்கள் "நீங்கள் தான் வைத்தியம் பார்க்க வேண்டும்" என்று நிர்பந்தித்தனர். வேறு வழியின்றி

தொடர்ச்சி 25-ஆம் பக்கம்


படிப்பகம்


www.padippakam.com



## பூச்சி மருந்து நிறுவனமா? சாவு வியாபாரமா?

ஜெர்மனியிலுள்ள ஐ.ஜி. ஃபார்பென் என்ற நிறுவனம் இரண்டாம் உலகப்போரின் போது, ''ஜிக்லோன்–பி'' எனும் நச்சு வாயுவை உற்பத்தி செய்தது. இந்த நச்சு வாயுதான் நாஜிகளின் கொட்டடியில் யூதர்கள் மீது ஏவப்பட்டு பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இந்த நிறுவனத்தின் வாரிசு நிறுவனம்தான் பாயர் நிறுவனம். இது உலகின் மிகப் பெரிய பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி செய்யும் ஏகபோக நிறுவனமாகும்.

ஜெர்மனியின் மான்ஹெய்ம் எனுமிடத்திலுள்ள பாயர் நிறுவனத்தின் பயிர் விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரிவு, இங்கிலாந்து நாட்டின் எடின்பர்க் நகரிலுள்ள ஹெரியட்–வாட் பல்கலைக் கழக மாணவர்களிடம் பழச்சாற்றில் பூச்சி மருந்து கலந்து கொடுத்து பரிசோதனைகளை நடத்தியுள்ளது. பணப் பற்றாக்குறையால் தவிக்கும் மாணவர்களைக் குறிவைத்து, அவர்களுக்கு தலா 450 பவுண்டு தொகையைக் கொடுத்து இச்சோதனைகளை பாயர் நிறுவனம் நடத்தியுள்ளது. இக்கொடுஞ்செயல் இப்போது மெதுவாகக் கசிந்து விசாரணை நடந்து வருகிறது.



நிரபராதி என விடுதலை செய்யப்பட்ட சஜ்ஜன் குமார் (நடுவில்).

பாயர் நிறுவனம் அப்பல்கலைக் கழகத்தின் 16 மாணவர்களுக்கு ''அசின்பாஸ் – மெதேல்'' (AM) எனும் நச்சு ரசாயனப் பொருளைப் பழச்சாற்றில் கலந்து கொடுத்து, 1998 முதல் 2000 வரை இச்சோதனைகளை எடின்பர்க் நகரிலுள்ள ஒரு தனியார் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடத்தியுள்ளது. உலக சுகாதார நிறுவனம் இந்த ரசாயனப் பொருளை மிகக் கொடிய நஞ்சு என்று வரையறுத்துள்ளது. இது இரத்த ஓட்டத்தையும் நரம்பு மண்டலத்தையும் கடுமையாகப் பாதிக்கக் கூடியது. கடந்த ஆண்டில் பெரு நாட்டில் எதிர்பாராத விபத்தினால் இந்நச்சுப் பொருள் கலந்த உணவை உட்கொண்ட 42 குழந்தைகளில் 24 பேர் மாண்டனர். அண்மையில் கனடாவில் ஆற்று நீரில் இந்த நஞ்சு கலந்ததால் பல்லாயிரக் கணக்கில் மீன்கள் செத்து மிதந்தன. இருப்பினும், இலாப வெறிகொண்ட பாயர் நிறுவனம் வீரியமிக்க பூச்சிக் கொல்லி மருந்தை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் இக்கொடூர சோதனையை மாணவர்களிடம் நடத்திப் பார்த்துள்ளது.

பயிர்களில் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்தில் ''அசின்பாஸ் – மெதேல்'' எனும் நச்சுப் பொருளின் விகிதத்தை அதிகரிப்பதால் மனிதர்களுக்குப் பாதிப்பு ஏற்படாது என்று காட்டி சுற்றுச்சூழல் நிறுவனங்களிடம் சான்றிதழ் பெறவும், இதனடிப்படையில் கொடிய நஞ்சு கலந்த வீரியமிக்க பூச்சி மருந்துகளை உற்பத்தி செய்து உலகெங்கும் விற்பனை செய்து கொள்ளையடிக்கவுமே இக்கொடிய பரிசோதனையை பாயர் நிறுவனம் செய்துள்ளது. இந்நச்சுப் பொருள் கலந்த பூச்சி மருந்து தயாராகி உபயோகத்துக்கு வந்துவிட்டால், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதோடு குழந்தைகளுக்குப் பேராபத்து ஏற்படும்.

ஏகபோக நிறுவனமான பாயர் நிறுவனம் பூச்சி மருந்து நிறுவனம் மட்டுமல்ல; தனது இலாப வெறிக்காக மனித இனத்தையே கொல்லவும் துணிந்து விட்ட சாவு வியாபார நிறுவனமாகும். பாசிச இட்லரின் கொலைக் கூடத்திற்கு நச்சு வாயு தயாரித்துக் கொடுத்த நிறுவனத்தின் வாரிசு நிறுவனம் வேறு எப்படி இருக்க முடியும்?

## கொலைகாரனுக்கு விடுதலை நீதிக்கு சிறைச்சாலை

முன்னாள் பிரதமர் இந்திராவின் கொலையைத் தொடர்ந்து தலைநகர் டெல்லியில் நடந்த சீக்கிய இனப்படுகொலையை முன்னின்று நடத்திய முன்னாள் காங்கிரசு எம்.பி.யான சஜ்ஜன் குமாரை டெல்லி மாவட்ட நீதிமன்றம் குற்றமற்றவர் என்று அண்மையில் விடுதலை செய்துள்ளது. 1984–அக்டோபர் 31–ஆம் நாளன்று இந்திரா கொல்லப்பட்டதும், தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு காங்கிரசு கிரிமினல்கள் சீக்கிய இனப்படு கொலையைக் கட்டவிழ்த்து விட்டனர். 5000–க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் நாடெங்கும் நரவேட்டையாடப்பட்டனர். தாடியும் தலைப்பாகையும் கொண்ட அனைவரும் வெட்டிக் கொல்லப்பட்டனர். பெண்களும் குழந்தைகளும் உயிரோடு எரிக்கப்பட்டனர். டெல்லியிலே சீக்கிய இனப்படுகொலையைத் தலைமையேற்று நடத்திய கொலைகாரர்களில், காங்கிரசு பிரமுகர்களான ஹெச்.கே.எல்.பகத், ஜெகதீஷ் டைட்லர், சஜ்ஜன் குமார் ஆகியோர் முன்னணியில் நின்றனர். இவர்களில் பகத்தும் டைட்லரும் ஏற்கனவே கொலை வழக்குகளிலிருந்து விடுதலையாகி விட்டனர். இப்போது கொலைகாரன் சஜ்ஜன் குமாரும்



படிப்பகம்

www.padippakam.com



கடந்த டிசம்பர் 23–ஆம் தேதியன்று டெல்லி மாவட்ட நீதிமன்றம் அளித்த வஞ்சக தீர்ப்பின்படி, கொலை வழக்குகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்திரா சாவுக்குப் பின்னர் தொடர்ந்து டெல்லியில் நடந்த நரவேட்டையில் நவீன்சிங் என்ற சீக்கியர் வெட்டிக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அவரது மனைவி அன்வார் கவுர் கொடுத்த புகாரின் அடிப்படையில் சஜ்ஜன் குமார் மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் சஜ்ஜன் குமார் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவே போலீசாருக்கு 10 ஆண்டுகளுக்கும் மேலாகியது. டெல்லி சீக்கியர் படுகொலைக்குப் பின் 6 மாதங்களுக்குப் பிறகு ராஜீவ் அரசால் நிறுவப்பட்ட ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் குற்றவாளிகளைப் பாதுகாக்கவே செய்தது. 1987–இல் நிறுவப்பட்ட ஜெயின் கமிட்டி, புலனாய்வு சரியான திசையில் செல்கிறதா என்று ஆராயத் தொடங்கியதும், 1989–இல் டெல்லி உயர்நீதிமன்றம், அவ்வாறு பரிசீலிக்கவோ, வழிகாட்டவோ இக்கமிட்டிக்கு அதிகாரம் இல்லை என்று தீர்ப்பளித்தது.

பின்னர் 1990–இல் அன்றைய வி.பி.சிங் அரசு, கொலைகாரன் சஜ்ஜன் குமார் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்துமாறு மையப் புலனாய்வுத் துறைக்கு (சி.பி.ஐ.) உத்தரவிட்டது. 1992–இல் சி.பி.ஐ. விசாரணை முடிந்த போது, மைய அரசில் மீண்டும் காங்கிரசு பதவியில் இருந்தது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய மைய அரசிடம் சி.பி.ஐ. அனுமதி கோரிய போது, அன்றைய பிரதமரும் உள்துறை அமைச்சருமான நரசிம்மராவ் அனுமதி தராமல் 2 ஆண்டுகள் இழுத்தடித்தார். பின்னர் இது டெல்லி மாநில அரசு சம்பந்தப்பட்ட விவகாரம் என்று முடிவாகி, நீண்ட இழுத்தடிப்புகளுக்குப் பிறகு 1994 டிசம்பரில் தான் குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு ஐந்து ஆண்டுகளுக்கு சாட்சிகளிடம் வாக்குமூலமும் விசாரணையும் நடந்தன.

இடைப்பட்ட ஆண்டுகளில் சாட்சிகளை உருட்டி மிரட்டியும் நைச்சியமாக பணபேரங்கள் நடத்தியும் குற்றவாளிகளைத் தப்புவிக்கும் முயற்சியில் காங்கிரசு கயவாளிகள் இறங்கினர். டெல்லி. சுல்தான்புரி பகுதியில் சஜ்ஜன் குமார் காங்கிரசு குண்டர்களை ஏவி விட்டு சீக்கியர்களைக் கொல்லுமாறு உத்தரவிட்ட நிகழ்ச்சி பற்றி 1984–இல் புகார் கொடுத்த முக்கிய சாட்சியான அன்வார் கவுர், ''சஜ்ஜன் குமார் அந்த கொலைகாரக் கும்பலில் இருந்ததாகக் கேள்விப்பட்டேன். ஆனால் நான் அவரை நேரடியாகப் பார்க்கவில்லை'' என்று கூறியதை வைத்தும், சஜ்ஜன் குமாருக்கு எதிராக யாரும் எந்தப் புகாரும் தரவில்லை என்று போலீசு ஆய்வாளர்கள் சாட்சியமளித்ததை வைத்தும், போலீசாரின் முதல் தகவல் அறிக்கையில் சஜ்ஜன் குமார் பெயரே இல்லை என்ற ஆதாரத்தைக் காட்டியும், குற்றம் நிரூபிக்கப் படாமல் போதிய ஆதாரமில்லாமல் உள்ளதாகக் கூறி நீதிமன்றம் சஜ்ஜன் குமாரை விடுதலை செய்துள்ளது.

சுல்தான்புரி – கல்யாண்புரி பகுதியில் பலநூறு சீக்கியர்கள் கொல்லப்பட்ட போதிலும் ஒரேயொரு முதல் தகவல் அறிக்கையை மட்டுமே டெல்லி போலீசு பதிவு செய்தது. அந்த அறிக்கையில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் கொலைகாரர்கள் பற்றிய எந்த விவரமும் இல்லை. இந்த ஆதாரத்தை காட்டித்தான் நீதிமன்றம் நயவஞ்சகத் தீர்ப்பை வழங்கியுள்ளது. சிவில் உரிமைக்கான கழகம், ஜனநாயக உரிமைக்கான கழகம், குடிமக்கள் நீதிக் குழு ஆகிய அமைப்புகள் பகத், டைட்லர், சஜ்ஜன் குமார் ஆகியோரே பிரதான குற்றவாளிகள் என்று தமது விசாரணை அறிக்கையில் பகிரங்கமாகக் குற்றம் சாட்டிய பின்னரும், நாட்டையே உலுக்கிய சீக்கிய இனப்படுகொலை வழக்கை மிக மேலோட்டமாக, சாதாரண கொலை வழக்கு போல கருதி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அத்தீர்ப்பின் மூலம், குஜராத்தின் கொலைகார மோடி உள்ளிட்டு எல்லா ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும் வன்முறை – கொலைகளில் ஈடுபட்டால் கூட விடுதலையாகி விட முடியும் என்பதற்கான வழி திறக்கப்பட்டுள்ளது. அரசாங்கமும் போலீசும் நீதித்துறையும் கூட்டுச் சேர்ந்து இனி எந்தவொரு கிரிமினல் அரசியல்வாதியையும் தப்பிவித்து, நிரபராதி என்று தீர்ப்பளித்து விடுதலை செய்யலாம்; அவர்கள் இனவெறி – மதவெறி கொலைவெறியாட்டங்களைத் தங்கு தடையின்றி நடத்தவும் செய்யலாம். நீதித்துறையின் இக்கயமையையும் துரோகத்தையும் அநீதியையும் இனியும் சகித்துக் கொண்டு நாட்டு மக்கள் இன்னமும் மௌனமாக இருப்பது தான் அவமானகரமானது. ●

---

23-ஆம் பக்கத் தொடர்ச்சி

போலீசார் தங்களுக்குத் தெரிந்த அசோக்நகர் குமரன் 'நர்சிங் ஹோ'மில் இரகசியமாக சேர்த்தனர். காலுடைக்கப்பட்ட சுப்பிரமணியன் எழுந்து நடமாடவே ஆறு மாத காலம் ஆகும் என்று மருத்துவ ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

போலீசு, அட்டூழியங்களை அறிந்த முற்போக்கு மற்றும் சனநாயக இயக்கங்கள் ''ஒடுக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு'' என்னும் பெயரில் கே.கே.நகர் காவல் நிலையத்தின் அட்டூழியங்களைக் கண்டித்து சுவரொட்டி, துண்டறிக்கைகள் மூலம் மக்களிடம் அம்பலப்படுத்தினர். 21.12.2002 அன்று எம்.ஜி.ஆர் நகரில் ஒரு கண்டனக் கூட்டத்தையும் நடத்தினர். ஆனால், இது வரை எந்த ஒரு நடவடிக்கையும் போலீசு மீது எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

போலீசார் கைது செய்த ஒருவரை விசாரிக்கும் முறையானது, கண்ணியமாக உயிர்வாழும் உரிமை, சுதந்திரமாக நடத்தப்படுவதற்கான உரிமை, சித்திரவதை மற்றும் கீழ்தரமாக நடத்தப்படுவதற்கெதிரான உரிமை ஆகியவற்றுடன் இணைந்ததாக இருக்க வேண்டும் என்று சட்டங்கள் கூறுகின்றன.

மேற்படி அரசியல் சட்ட விதிமுறைகளை, கிரிமினல் பிரபல்யங்களைக் கைது செய்யும் போது மட்டுமே போலீசு கடைபிடிக்கிறது. கைதுக்கான நீதிமன்ற உத்திரவுகளை பெற்ற பிறகும் கிரிமினல்களின் வீட்டுவாசல்களில் நாயாகக் காத்திருக்கிறது. கிரிமினல்கள் பூசை, புனஸ்காரம் செய்து, மடிப்பு கலையாத வேட்டி – சட்டை மாட்டிக்கொண்டு வெளியில் வரும்வரை காத்திருக்கிறது.

ஆனால், உழைக்கும் மக்களையும் அவர்களுக்காகப் போராடுபவர்களையும் திடீரென எவ்விடத்திலும் எந்த நேரத்திலும் கைது செய்கிறது. சித்திரவதையும், 'லாக்கப்'சாவுகளும் போலீசு கொட்டடியில் தொடர்கதையாகிவிட்டன. இந்த அட்டூழியங்கள் பலமுறை நிரூபிக்கப்பட்டும் தம் உடம்பில் எந்த சேதாரமும் இல்லாமல் போலீசால் உலாவ முடிகிறது.

அரசியலமைப்புச் சட்டவிதிகள், உச்ச நீதிமன்ற வழிகாட்டும் நெறிமுறைகள் முதலான எவையும் உழைக்கும் மக்களுக்கு ஓடிவந்து உதவாது. போலீசு அடக்குமுறை – அத்துமீறல்களுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடும் போது மட்டுமே விடிவு பிறக்கும்.

— பு.ஜ. செய்தியாளர்கள், சென்னை

www.padippakam.com

இந்து என்று சொல்லாதே! பார்ப்பான் பின்னே செல்லாதே!



# பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

## 22, 23 பிப்ரவரி – 2003
## தஞ்சை – திருவள்ளுவர் திடல்

### கருத்துரையாற்றுவோர்

- பேரா. ராம் புனியானி
  ஐ.ஐ.டி., மும்பை.
- திரு. சிவக்குமரன்
  பாளையங்கோட்டை.
- தோழர். பி. திருமலைராசன்
  செயலர், கீழமை நீதிமன்றங்களின் வழக்குரைஞர் சங்கக் கூட்டமைப்பு, தமிழ்நாடு.
- திரு. அஸ்கார் அலி எஞ்சினியர்
  மும்பை.
- பேரா. பெரியார்தாசன்
  சென்னை.
- தோழர் ஆ. சிவசுப்பிரமணியன்
  தூத்துக்குடி.
- நீதிபதி ஆஸ்பெட் சுரேஷ்
  ஓய்வு பெற்ற நீதிபதி, பம்பாய் உயர் நீதிமன்றம்.
- பேரா. சம்சுல் இசுலாம்
  தில்லி பல்கலைக்கழகம்.
- தோழர் பி.ஆர். குப்புசாமி
  வழக்குரைஞர், கரூர்.
- தீஸ்தா சேதல்வாத்
  ஆசிரியர், ''கம்யூனலிசம் காம்பெட்''.
- முனைவர் ஆனந்த் தெல்தும் டெ
  மும்பை.

மற்றும்

பாரதக் கலாச்சாரம் என்று ஆர்.எஸ்.எஸ். கும்பலால் அழைக்கப்படும் பார்ப்பன பயங்கரவாதம் இமயம் முதல் குமரி வரை எண்ணிலடங்கா மக்களைப் பலி கொண்டிருக்கிறது. பார்ப்பன பயங்கரவாதத்தின் இரத்த சாட்சியங்களான அவர்களில் சிலர், தங்கள் அனுபவங்களைப் பேசுகிறார்கள்.

*அணிதிரண்டு வாரீர்!* *ஆதரவு தாரீர்!*

**ம.க.இ.க. – பு.மா.இ.மு. – வி.வி.மு. – பு.ஜ.தொ.மு.**


படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

● மோடி கும்பலின் இந்துவெறி பாசிச பயங்கரத்தை மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணை அறிக்கையின் வாயிலாக எடுப்பாகத் தோலுரித்துக் காட்டியது பு.ஜ. மோடி, அத்வானி, வாஜ்பாய் ஆகிய தேசிய குற்றவாளிகள் விசாரணைக் கூண்டில் நடுங்கியபடியே நிற்பதாக வரையப்பட்டிருந்த கேலிச்சித்திரம், ஒருநாள் உழைக்கும் மக்களின் முன் உண்மைச் சித்திரமாக மாறும் என்பதில் சந்தேகமேயில்லை.

– நளினி, மதுரை.

● பயங்கரவாதப் பீதியூட்டி அரசியல் ஆதாயம் தேடும் பார்ப்பன பாசிஸ்டுகளுக்கு விசுவாசமாகவே பத்திரிகைகள் உள்ளன என்பதை ''ஈரைப் பேனாக்கும் போலீசு; பேனைப் பெருமாளாக்கும் பத்திரிகைகள்'' என்ற கட்டுரை ஆதாரபூர்வமாக நிருபித்துக் காட்டியது. சட்டத்தின் ஆட்சிக்கு வில்லனாக அதிகார வர்க்கமும், வில்லாதி வில்லனாக நீதிபதிகளும் இருப்பதை ''சட்டத்தின் முன் அனைவரும் சமமில்லை'' என்ற கட்டுரை அழகாக சுட்டிக் காட்டியது. பாசிச ஜெயா, உலக வங்கியின் கைக்கூலிதான் என்பதை அடுத்தடுத்த பொருளாதாரத் தாக்குதல்களைத் தொகுத்து விளக்கியது சிறப்பாக இருந்ததோடு, பிரச்சாரத்துக்குப் பெரிதும் உதவியது.

— வாசகர் வட்டம், திருச்சி.

● ''தருமபுரியில் நக்சல் ஒழிப்பு வேட்டை: போலீசுக்குத் துப்பாக்கி; பத்திரிகைக்குப் பேனா'' – என்ற கட்டுரை மூலம் தருமபுரியில் முற்போக்கு இளைஞர் அணி தோழர்கள் மீது போலீசார் நடத்திய தாக்குதலையும் கொலைவெறியாட்டத்தையும் முழுமையாக அறிந்து கொள்ள முடிந்தது. அதோடு மு.இ.அணியினரின் திசைவிலகிய போக்கையும் புரிந்து கொள்ள முடிந்தது. மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போன அவர்களது தவறான நடைமுறையின் காரணமாகவே தியாகிகளான தோழர்கள் இரவீந்திரன், சிவா ஆகியோரை வீணாக இழக்க வேண்டியதாயிற்று. மு.இ. அணியினரின் தவறான நடைமுறையை விமர்சித்து ''குறுக்குவழிதேடி... குழு சாகச வழிபாடு'' என்ற சிறு வெளியீட்டின் மூலம் முன்பு பு.ஜ. உணர்த்தியது, மிகச் சரியானது என்று மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

— ஆ.நிவாஸ், கா.மூர்த்தி, பரமக்குடி.

● ஜனவரி இதழில் ''ஆண்டவனின் சேவையில் இந்திய அஞ்சல் துறை'' என்ற செய்தியானது இந்திய அரசின் போலி மதச்சார்பின்மையைத் திரைகிழித்துக் காட்டியது.

— ஹேமா, செங்கோட்டை.

● இந்துவெறியன் மோடியின் பதவி ஏற்பு விழாவில் பாசிச ஜெயா பங்கேற்கிறார்; இந்து வெறியர்களுடன் கூட்டணி அமைக்கத் துடிக்கிறார்; தமிழகத்தைப் பார்ப்பன மாநிலமாக்கத் துடிக்கிறார். இந்து வெறியர்கள் இன்னமும் உலாவிவருவதற்கு தி.மு.க; ம.தி.மு.க; பா.ம.க; போன்ற கட்சிகள் சமூக அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்துத் துரோகிகளாக நிற்கின்றனர். இந்நிலையில் படர்ந்து வரும் பார்ப்பன பயங்கரவாதத்தை உறுதியாக, கறாராக எதிர்த்துப் போராடாமல், காங்கிரசும் போலி கம்யூனிஸ்டுகளும் மிதவாத இந்துத்துவத்தையே கடைபிடிக்கின்றனர். இச்சமரசப் போக்கை வீழ்த்தாமல், இந்து வெறியர்களை முறியடிக்க முடியாது என்ற உண்மையைத் தலையங்கம் அழுத்தமாக சுட்டிக் காட்டியது.

— வீ. சேகர், செயங்கொண்டம்.

● இசுலாமிய தீவிரவாதி இமாம் அலி போன்றவர்களை அவரது உறவினர்கள் மற்றும் இயக்கத்தவர்களின் விருப்பப்படி அடக்கம் செய்ய அனுமதிக்கும் அரசு, நக்சல்பாரி தோழர் சிவாவின் சவ அடக்கத்திற்கு – அவர் சார்ந்த இயக்கத்தவர்களுக்கு அனுமதி மறுத்து அச்சுறுத்துகிறது. அரசினர் – போலீசின் பாசிச பயங்கரத்தை மக்கள் புரிந்து கொள்ளும்போது ''நாங்களும் நக்சல்பாரிகள்தான்!'' என்ற மக்கள் முழக்கம், ஆளும் வர்க்கத்தின் காதுகளைத் துளைக்கும்; கனவுகளைப் பொசுக்கும்!

— ருத்ரன், காவேரிப்பட்டினம்.

● இந்து வெறியர்கள் கூத்தாடும் டிசம்பர் – 6 அன்று நடந்த திருத்துறைப்பூண்டி சம்பவம் படித்தேன். ''ஏண்டா துலக்கப் பயலுகளா; பாகிஸ்தானுக்கு ஓடுங்கடா'' என்று கூறி போலீசார் உண்மையான கம்யூனிஸ்டு தோழர்களைத் தாக்கியதை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன். ஆர்.எஸ்.எஸ். இந்து வெறியர்களின் அடியாள்தான் தமிழக போலீசு என்பதற்கு, இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

— அப்துல்லாவாக மாறிய சரவணன் (முன்னாள் இந்து முன்னணி வட்டச் செயலர்) பாடி, சென்னை.

● தருமபுரியில் நக்சலைட் ஒழிப்பு வேட்டை பற்றி தமிழகப் பத்திரிகைகள் பீதியூட்டி அவதூறு செய்து வந்த நிலையில், பு.ஜ. இதழ் உண்மைச் செய்திகளுடன் சரியான விளக்கத்தை அளித்ததோடு, போலீசு செய்தியை வாந்தியெடுக்கும் நாளிதழ் நிருபர்களுக்கு நெத்தியடியும் கொடுத்துள்ளது. தனியார்மய கல்விக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு 'அல்வா' கொடுக்கும் அரசுத் தலைவர் அப்துல் கலாமின் அரிதாரத்தைக் கலைத்த ''இதுதான் இன்றைய இந்தியா'' சிறப்பு.

— வாசகர் வட்டம், விருத்தாசலம்.

## தோழர் கண்ணனின் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்!

திருச்சி – திருவரம்பூர் கணபதி நகரைச் சேர்ந்த தோழர் கண்ணன், கடந்த ஜனவரி 10–ஆம் தேதியன்று இதய நோய் காரணமாக மரணமடைந்து விட்டார். சி.பி.எம். கட்சியின் ஆதரவாளராகச் செயல்பட்டு வந்த தோழர் கண்ணன், இப்பகுதியில் இயங்கி வந்த புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் அரசியல் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, எட்டாண்டுகளுக்கு முன்பு தன்னைப் புரட்சிகர இயக்கத்துடன் இணைத்துக் கொண்டார். இப்பகுதிவாழ் மக்களுடன் ஐக்கியப்பட்டு, மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் ஆர்வமாகச் செயல்பட்டு வந்த அவர், அமைப்பு பணிகளை நிறைவேற்ற அயராது உழைத்தார். அமைப்புத் தோழர்களின் கூட்டங்களின் போது தானே பொறுப்புடன் சமையல் வேலைகளைச் செய்து உதவினார். எல்லையற்ற அன்புடன் அமைப்புத் தோழர்களைத் தனது குடும்ப உறுப்பினர்களாகப் பாவித்தார். அமைப்பின் மீதும் புரட்சிகர அரசியல் மீதும் தான் மட்டுமின்றி, தனது குடும்பத்தையும் பற்றும் நம்பிக்கையும் கொள்ளச் செய்தார். உடல் நிலை சரியில்லாத போதிலும் தன்னால் இயன்ற அமைப்புப் பணிகளைச் செய்து வந்தார். நோயும் இறப்புமே அவரை இறுதியில் ஓய்வு கொள்ளச் செய்தது.



பகுதிவாழ் மக்கள், அமைப்புத் தோழர்கள், அனைத்துக் கட்சிப் பிரமுகர்கள்–என நூற்றுக்கும் மேற்பட்டோர் தோழர் கண்ணனின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். பு.மா.இ.மு. செயலர் தோழர் சேகர் தலைமையில் நடந்த இரங்கல் கூட்டத்தில், ம.க.இ.க. மாநிலச் செயலர் தோழர் மருதையன் மற்றும் பல முன்னணித்தோழர்கள் கலந்து கொண்டு, தோழர் கண்ணனின் புரட்சிகர உணர்வையும் நேர்மையையும் பற்றி நின்று செயல்பட உறுதியேற்றனர்.

— பு.மா.இ.மு., திருச்சி.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salal, Kodambakkam, Chennal - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salal, Kodambakkam, Chennal - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

இந்திய நாட்டில் சமூக நீதி எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதற்கு ஓர் உயிருள்ள சாட்சிதான் இந்தப் படத்தில் இருக்கும் லெட்சுமணன் சிங். இராசஸ்தான் மாநிலத்திலுள்ள பரத்புர் கிராமத்தைச் சேர்ந்த வரான லெட்சுமணன் சிங், தாழ்த்தப்பட்ட ஏழை விவசாயி. அரசாங்கமே நிர்ணயித்துள்ள சட்டப்படியான குறைந்தபட்சக் கூலியைத் தரக் கோரி இவர் போராடியதால், குஜ்ஜார் சாதியைச் சேர்ந்த சாதிவெறி பிடித்த நிலப்பிரபுக்கள் லெட்சு மணன் சிங்கை மிருகத்தனமாகத் தாக்கியதோடு, அவரது கால் களையும் துண்டித்து வீசியெ றிந்து விட்டனர்.




தாழ்த்தப்பட்டவரான லெட்சுமணன் சிங், தனக்குச் சேர வேண்டிய கூலியைக் கேட்ட வுடன், குஜ்ஜார் நிலப்பிர புக்களுக்கு ''இந்து ஒற்றுமை'' நினைவுக்கு வரவில்லை. மாறாக, அவர்களுக்குள் மனு தர்மவெறிதான் பொங்கி வழிந் தது. தாராளமயம், தனியார்மயம் மூலம் இந்தியா, தன்னை எவ்வ ளவுதான் நவீனமாகக் காட்டிக் கொண்டாலும், இந்த நாடு இன்னமும் கீழ்வெண்மணி காலத்தைத் தாண்டவில்லை என்பதற்கு லெட்சுமணன் சிங் இன்னுமொரு உதாரணம்.

# இதுதான் இன்றைய இந்தியா

இந்தத் தாக்குதல் நடந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்ட பின்னும், இது பற்றி வழக்கு பதிவு செய்யப்படவில்லை. வழக்கே பதிவாகாமல் இருக்கும் பொழுது குற்றவாளிகளை விசாரிப்பது பற்றியோ, கைது செய்வது பற்றியோ பேச முடி யுமா? அதேசமயம், மேல்சாதி வெறியர்களோ, ''பஞ்சாயத்து உறுப்பினராக இருக்கும் லெட்சுமணன் சிங்கின் மனைவி அப்பதவியை விட்டு விலக வேண்டும்; இல்லையென்றால், அவருக்கும் நடக்கக் கால் இருக்காது'' என மிரட்டிக் கொண்டு திரிகிறார்கள். மனு தர்மத்தின் முன் இந்திய அரசியல் சட்டம் மண்டி யிட்டுக் கிடப்பதைத்தான் இச்சம்பவம் நிருபித்துக் காட்டுகிறது.



உ.பி. மாநில முதல்வர் மாயாவதியின் 48-ஆவது பிறந்த நாளையொட்டி லக்னோ நகரில் நடந்த கொண்டாட்டம் தான் இந்தப் படம். மாயாவதியின் பிறந்த நாள் உ.பி. மாநில அரசு விழா வாகவே கொண்டாடப் பட்டது. உ.பி. மாநிலத்தில் வீசும் கடுங்குளிர் காற்றால் நடுங்கிச் சாகும் ஏழை மக்களுக்கு ஒரு போர்வையைக் கூட வழங்காத மாயாவதி, தனது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக 1.35 கோடி ரூபாயை அரசு கஜா னாவில் இருந்து அள்ளி வீசினார். கண்ணாடியால் அமைக்கப்பட்ட விழா மேடை, 51 கிலோ பிறந்த நாள் கேக், 6,000 கிலோ மலர்கள் – பூச் செண்டுகள், தொண்டர் களுக்கு வழங்க 1 இலட்சம் லட்டுகள் என அமர்க்களப் பட்டது 'தாழ்த்தப்பட்ட சகோதரி' யின் பிறந்த நாள்! தனது பிறந்த நாளை, தாழ்த்தப்பட்டோரின் – நலிவடைந்தோரின் சுயமரி யாதை நாள் என அறிவித்து, இந்த ஆடம்பரத்தையும், வக்கி ரத்தையும் தாழ்த்தப்பட்டோரின் பெயரால் பூசி மெழுகி விடவும் முயன்றார், மாயாவதி.

லெட்சுமணன் சிங், தனது உரிமைகளுக்காக மேல்சாதி நிலப்பிரபுக்களோடு மோதி கால்களை இழந்துள்ளார். ஆனால், தாழ்த்தப்பட்டோரின் சுயமரியாதை பற்றி வாய்கிழியப் பேசும் மாயாவதியோ, பதவி நாற்காலிக்காக பார்ப்பன – பனியா சாதிவெறிக் கும்பலின் கட்சியான பா.ஜ.க.வுடன் கூட்டணிக் கட்டிக் கொண்டு திரி கிறார். தனது வீட்டை இடித்த மேல்சாதிக்காரனின் மீது புகார் கொடுக்கப் போன தாழ்த்தப் பட்டவரான ராம் பஜனைத் துரத் தியடித்துள்ளது, உ.பி. மாநில போலீசு. இதுதான் 'தாழ்த்தப் பட்ட சகோதரி' மாயாவதி ஆட்சியின் இலட்சணம்!

மேல்சாதி வெறியர்களோடு நடத்திய போராட்டத்தில் தனது கால்களை இழந்து, அதற்கு நீதியும் கிடைக் காமல், நட்ட ஈடும் கிடைக் காமல் வாழும் லெட்சுமணன் சிங் போன்றோர் ஒருபுறம். தாழ்த்தப்பட்டோர் தலைவர் என்ற போர்வையில் ஒட்டுப் பொறுக்கிவிட்டு, பதவியை யும், அதிகாரத்தையும் தனது சுயநல – ஆடம்பர – வக்கிர வாழ்விற்கு மட்டுமே பயன் படுத்தும் மாயாவதி போன்றோர் மறுபுறம். தாழ்த்தப்பட்டோரை ஒடுக்கும் மேல்சாதி வெறியர் களை மட்டுமல்ல, தாழ்த்தப் பட்டோரை வாக்கு வங்கி களாகப் பயன்படுத்திக் கொள்ளும் மாயாவதி போன்ற ஓட்டுண்ணி களையும் நாம் துரத்திய டிக்கப் போவது எப்போது?